# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி











## மட்டக்களப்பில் நடைபெற்ற சமாதானப்பேரணி

செப்டம்பர் - 2006 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**செப்டம்பர் - 2006**

**மலர்-38** **இதழ்- 06**

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

*விலை - 15/=*
*ஆண்டு சந்தா : 250/=*
*ஆறுமாதச் சந்தா : 130/=*
*(தபாற்செலவு உட்பட)*

# உள்ளே



| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| மட்டக்களப்பில் நடைபெற்ற... | - | 02 |
| தென்னாசிய விளையாட்டிற்கு.. | - | 03 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 05 |
| இலக்கிய மஞ்சரி | - | 07 |
| அரசியல் அரசியல் அரசியல்... | - | 09 |
| அழகின் அலங்காரம் | - | 12 |
| புலவர் நாவில் பொருந்திய.... | - | 14 |
| மாணவர் பக்கம் | - | 16 |
| முன்னோடி ஞானப்பிரகாச... | - | 17 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 21 |
| அருட்பணி. நிஹால் ஜிம்பிரவுன் | - | 23 |
| டாக்டரிடம் கேளுங்கள் | - | 25 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| பரிசுப் போட்டி | - | 28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

இந்தப் புரட்டாதி மாதத்தில் (SEPTEMBER) - எமது நாட்டிலும் சரி உலக நாடுகளிலும் சரி பல சம்பவங்கள் நடந்தேறின. ஆனால் அமெரிக்காவில் 2001ம் ஆண்டு புரட்டாதி 11ம் திகதி நடை பெற்ற விமானத் தாக்குதலின் 5வது ஆண்டு நினைவு தினம்தான் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது எனலாம். அன்றைய நினைவு நாளில் அமெரிக்க அதிபர் ஜோர்ச்புஷ் தமது உரையில் "உலகில் பயங்கரவாதம் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்" என்று சூழ் உரைத்தார். அமெரிக்காவின் நேச நாடுகளும் "உலக பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குச் சரியான தருணம்" என்று கங்கணம் கட்டியுள்ளனர். ஆனால் பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் "இது சமாதானத்தை கைக்கொள்ள வேண்டிய அறிகுறி" என்று உலக மக்கள் அனைவரையும் சமாதானத்தின் பால் ஈர்த்துள்ளார்.

இம்மாதத்தின் 21ம் திகதி உலக சமாதான தினமாகும். அன்றைய நாளில் அரசு, அரசசார்பற்ற, சமய, சமூகக் கழகங்களும் அமைப்புக்களும் பல நிகழ்வுகளை இதனை ஒட்டி நடாத்தலாம். ஆனால் (சமாதானத்தை விரும்புகின்ற) ஒவ்வொருவரும் தனக்குத்தானே நான் வன்முறையை விரும்பு கிறவனா, தனி மனித சுதந்திரத்தை மதிக்கிறவனா, மாற்றான் கருத்துக்கு மதிப்பளிப்பவனா, மனிதத்துக் குரிய கௌரவத்தைக் கொடுப்பவனா போன்ற கேள்விக்கணைகளைக் கேட்டுக்கொண்டே போக வேண்டும். இவற்றிற்கான விடையைக் காணும் போது :- முதலில் தன்னிலும், தன் குடும்பத்திலும், தன் சமூகத்திலும் இறுதியாய் நாட்டிலும் சமாதானத்தைக் கண்டடைவான். இப்படியாக சமாதானத்தின் தேவையைப்பற்றி ஆராய்கின்ற வேளையிலே நமது நாட்டு அரசியலில் ஏற்பட்டுள்ள நகர்வுகள் பெரும் ஆச்சரியத்தையே கொடுத்துள்ளன. அதாவது தொண்டமான், சந்திரசேகரம் என்போர் கைகோர்த்து ஆளும் தரப்பில் இடம் பிடித்துக் கொண்டமையானது சிறிய இலாபத்திற்காக பெரிய முதலைகள் விளையாட இறங்கியிருக்கின்றன என்பதனையும் கடைசியில் வேட்டையாடப்படுவதெல் லாம் தோட்டத் தொழிலாளர்கள்தான் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. மற்றும் நாட்டின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட இருக்கின்ற சதுரங்க ஆட்டமானது சிறுபான்மையினருக்கு ஒட்டு மொத்தப் பாதிப்பாக அமையலாம் அல்லது பொதுவான சமாதான காரணிகளுக்குச் சாதகமாக அமையலாம். எது எப்படி இருந்தாலும் சுற்றிச் சுற்றி சுப்பருடைய கதைதான். இருப்பினும் J.V.P யினருக்கும், ஜாதிக ஹெல உறுமய கட்சியினருக்கும் இதனால் ஏற்பட்டுள்ள அங்கலாய்ப்பு ஆப்பிழுத்த குரங்கின் கதையாக விஷ்வரூபம் எடுத்துள்ளது.

இப்பேற்பட்ட தர்ம சங்கடமான அரசியல் நிலையிலே நாடெங்கும் காணாமல் போயுள்ளோர் தொகை அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இந்த பட்டியலில் மனிதாபிமான அடிப்படையில் மக்கள் சேவையே மகேசன் சேவை என்று உயிரையும் துச்ச மெனக் கருதிப் பணி புரிந்த அருட்தந்தை நிஹால்ஜிம் பிரவுண் அடிகள் பட்டப் பகலில் இராணுவ கட்டுப் பாட்டுப் பகுதியில் காணாமல் போயுள்ளார். அது யாராக இருந்தாலும் அருட்தந்தை நிஹால்ஜிம் பிரவுண் அடிகளை விடுவிக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் பணிபுரிகின்ற ஒவ்வொருவருக்கும் தகுந்த மதிப்பும், பாதுகாப்பும் வழங்க முன்வர வேண்டும். இணைத்தலைமை நாடுகளைப்போல் உலக நாடுகள் அத்தனையும் சம்பந்தப்பட்டவர் களுக்குத் தகுந்த நெருக்குவாரங்களைக் கொடுத்து இலங்கையில் சமாதானம் பிறக்கவும் மக்கள் நிம்மதியாய் வாழவும் வழிசமைக்க வேண்டும்.

மறுமடலிலும் இணைய ஆசைகளுடன்

- ஆசிரியர்



## இறைவாக்கு

அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர் ;

ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்களெனப்படுவர்

மத். 5:9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் நடைபெற்ற சமாதானப்பேரணி

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கடத்தப்பட்டுள்ள அருட்தந்தை திருச்செல்வம் ஜிம்பிரவுண் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்று கோரியும் செப்ரெம்பர் 3ம்திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மறைக் கோட்டத்தினால் சமாதானப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பெருந்தொகையானோர் பங்கு கொண்ட இப் பேரணியில் பல்வேறு சமூகத்தினரும் கலந்து கொண்டதோடு தூர இடங்களிலிருந்தும் சமாதான ஆர்வலர்கள் பங்கு கொண்டு சமாதானம் ஏற்படுவதில் தமக்குள்ள ஆர்வத்தையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியிருந்தனர்.




தாண்டவன்வெளி வியாகுலமாதா ஆலய முன்றலிலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் பிரதான பாதை ஊடாக புளியந்தீவு புனித மரியாள் இணைப் பேராலயத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தின் போது சமாதானத்தை வலியுறுத்தியும் கடத்தப்பட்ட அருட்தந்தை அவர்களை விடுவிக்கக் கோரியும் பல பதாதைகள் கொண்டுவரப்பட்டன. இறுதியில் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை P.யோசப் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது. வழிபாட்டின் போது குருமுதல்வர் திருவுரை ஆற்றுகையில்:

"அமைதிக்கான யுத்தம், சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் அப்பாவி உயிர்கள் பலிக்கடாக்களாவது ஒடுக்கு முறையின் உச்சக் கட்டமாகும்" என்றார்.

மேலும் அவர் தமது திருவுரையில்:

"உரிமைக்காக, மனித மாண்பிற்காகக் குரல் கொடுக்கும் மக்களைக் கொடுமைப் படுத்தும் மரபு இன்று வளர்ச்சி கண்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் ஷெல் தாக்குதல்களினால் தாக்கப்பட்ட 91 உயிர்களைக் காப்பற்ற மருத்துவமனைக்கு எடுத்துச்சென்ற அருட்தந்தை ஜிம் பிரவுண் காணாமற் போய்விட்டார். அவருக்கும் அவருடன் சென்றவருக்கும் நடந்ததை எண்ணி அதிர்ச்சியடைந்துள்ளோம்

கைது செய்யப்படுதல், காணாமற்போதல் எமக்குப் புதியதல்ல ஆனால் இவை அண்மைக் காலத்தில் அசுர வேகத்தில் அதிகரித்து வருவதுதான் பொறுக்க முடியாமல் உள்ளது.

ஆயிரம் ஆயிரம் உயிர்களைப் பலி எடுக்கும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அக்கிரமங்கள், அட்டூளியங்கள், அநீதியின் ஆரவாரங்கள் அநியாயங்கள் அகற்றப்பட வேண்டும்.

யுத்தத்தை விரும்புபவர்களின் எண்ணிக்கையை விட சமாதானத்தை விரும்புபவர்களின் எண்ணிக்கை பல மடங்கானது. எனவே சமாதானத்திற்காக மக்கள் ஒன்று திரண்டு போராட வேண்டும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" சமாதானத்தை விரும்புபவர்களின் பலம் ஒன்று திரள வேண்டும். இருளிலும் ஒளிக்கீற்றுக்கள் இருக்கின்றன. இருளை விரட்டி விட ஒளியை இனங்காட்டிட வேண்டும் நீதிக்கான செயல்களும் விடுதலைக்கான போரட்ட ஈடுபாடுகளும் நற்செய்திப் பணியின் பாங்கானதொரு பாகமேயாகும்.

மனிதனை அடிமைப்படுத்தும் ஒவ்வொரு அமைப்பினின்றும் மனித சமுதாயத்தை விடுவிக்கும் திருச்சபையின் கடமையும் அதுவே ஆகும். இயேசு அனைவரின் விடுதலைக்காகவும் தன்னையே அர்ச்சனையாக்கினார்.

உண்மை, அன்பு, நீதி, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் நிரம்பிய இறையாட்சி மலர, ஆண்டவரின் நாள் விரைவில் வர இதயம் திறந்து வேண்டுவோம்" இவ்வாறு குரு முதல்வர் அவர்கள் தமது திருவுரையில் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசிய விளையாட்டிற்கு வயது - 22

ஆசியாக் கண்டத்தின் தென் எல்லையில் உள்ள நாடுகள் ஒன்றிணைந்து இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நடாத்துகின்ற விளையாட்டுப் போட்டிகள் அதன் பத்தாவது அத்தியாயத்தை இலங்கையின் தலைநகர் கொழும்பிலும், அதனை அண்டியுள்ள ஒரு சில மாவட்டங்களிலும் சிறப்பாக நிறைவு செய்தன. 1984ம் ஆண்டு நேபாளத்தின் தலைநகர் "காத்மண்டுவில்" உத்தியோக பூர்வமாக தென்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகி தற்பொழுதுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**வியப்பான விடயம்:**

- தென்னாசிய அதிவேக வீரர்
  **உமங்க சுரேந்திர**
- ஹொக்கி சம்பியன்
  **பாகிஸ்தான்**
- உதைப்பந்தில் கோட்டைவிட்டது
  **மாலைதீவு**
- உதைப்பந்து சம்பியன்
  **பாகிஸ்தான்**
- சைக்கிள் ஓட்டத்தில் ஆதிக்கம்
  **இலங்கை**
- இலங்கைக்கு
  **178 பதக்கங்கள்**



இலங்கைத் தீவைப் பொறுத்தவரை ஏதோ ஒரு விதத்தில் எப்பொழுதும் மக்கள் (Score) புள்ளிகளை எண்ணிக்கொண்டிருப்பதை அவதானிக்கலாம். குறிப்பாக கிறிக்கெட்டில் அல்லது யுத்தத்தில் இறந்தவர்களின் தொகையை எண்ணிக்கொண்டிருப்பார்கள். இம்முறை நடந்த உண்மை என்னவென்றால் ஒரே நேரத்தில் விளையாட்டில் பெறுகின்ற பதக்கங்களை மக்கள் எண்ணிக்கொண்டிருப்பதையும் மறுபுறம் வடக்கு, கிழக்கில் நடைபெற்ற யுத்தத்தில் இறந்தோரையும், காயமடைந்தோரையும், இடம் பெயர்ந்தோரையும் எண்ணிக்கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது. இவைகளைப் பார்க்கின்ற பொழுது, இரண்டும் ஒருவகையில் விளையாட்டுக்கள் போன்றுதான் தென்படுகின்றன. காரணம் பதக்கங்களைப் பெறுவதற்குத் தங்களுடைய உச்சக்கட்ட சக்தியையும், விளையாட்டுத் திறமைகளையும், மதிநுட்பங்களையும் விளையாட்டு வீரர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கையில் மறுபுறம் இடங்களைக் கைப்பற்றுவதற்கும், படைக்கலங்களைப் பெருக்கிக் கொள்வதற்கும் இரவு பகலாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்த படையினரையும், போராளிகளையும் காணமுடிந்தது.

எது எவ்வாறெனினும் ஒருபுறம் விளையாட்டு வீரார்கள் பதக்கங்களைப் பெறுவதற்குத் தங்கள் வியர்வையைச் சிந்துவதையும், படையினர், போராளிகள் மற்றும் முக்கியமாகப் பொதுமக்கள் இரத்தத்தைச் சிந்துவதையும் பார்க்கின்றபொழுது மனம் இலேசாக வலித்துக் கொண்டிருக்கின்றது.

உலகத்திலே இலங்கைத் தீவிற்கு ஒரு சிறப்புண்டு. அது என்னவென்றால் எல்லோரும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை இந்து சமூகத்திரத்தின் முத்து என்று அழைப்பார்கள். இவ்வாறு யுத்தம் தொடர்ந்து மனித அழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கு மேயானால் இந்து சமுத்திரத்தின் வெடிகுண்டு என்று இலங்கைத் தீவை அழைக்கும் காலம் வெகுவிரைவில் வந்து விடுவதை யாராலும் தடுக்கமுடியாமற் போய்விடும். இவைகளை ஒருபுறம் வைத்துவிட்டு 10வது தெற்காசிய விளையாட்டின் பதக்கப் பட்டியலை அவதானிப்போம்.

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | பித்தளை | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 118 | 69 | 47 | 234 |
| பாகிஸ்தான் | 43 | 44 | 71 | 158 |
| இலங்கை | 37 | 63 | 78 | 178 |
| நேபாளம் | 09 | 15 | 31 | 55 |
| ஆப்கானிஸ்தான் | 06 | 07 | 18 | 31 |
| பங்களாதேஷ் | 03 | 15 | 32 | 50 |
| பூட்டான் | - | 03 | 10 | 13 |
| மாலைதீவு | - | - | - | - |

பதக்கப் பட்டியல் பற்றிய அலசல் அடுத்த மாதம் தொடரும்....

**(ஜொனா) அருட்தந்தை யூஜின்போல் ஜொனத்தன்.**

## எளிய வைத்தியம்!

**சேற்றுப் புண்:**

வடித்த கஞ்சியோடு மஞ்சள் பொடியைக் குழப்பி சூடுபடுத்தித் தடவினால் மறுநாளே குணமாகும் .

**பித்த வெடிப்பு:**

மருதாணி இலையை அரைத்து தினசரி படுக்கச் செல்லுமுன் தடவி வர ஒரே வாரத்தில் குணமாகும்..

**மலச்சிக்கல்:**

கடுக்காயைத் தூள் செய்து சிறிதளவு வென்னீரிலே கலந்து சாப்பிட, மறுநாளே உங்கள் சிக்கல் தீரும்.

**அல்சர்:**

முட்டைக் கோசை வேகவைத்து, அந்தச் சாறைத் தினசரி காலை வெறுவயிற்றில் ஒரு கப் சாப்பிட்டு வந்தால் குணமாகும்.

**மூலம்:**

பப்பாளிப் பழத்தை தோல்சீவி, தேனில் தொட்டுச் சாப்பிட்டு வர மூலம் குணமடையும்.

**சுளுக்கு:**

ஒரு தேக்கரண்டி தேங்காய் எண்ணெயில் சிறிது கற்பூரத்தைப் போட்டுக் காய்ச்சி சுளுக்கு உள்ள இடத்தில் சூடு பறக்கத் தேயுங்கள். சுளுக்கு போயே போச்சு!

– டாக்டர். கே. எஸ். சுப்பையா –

நன்றி: 'ஹெல்த்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருச்சபையின் பரம்பலுக்கு உழைத்த உத்தமர்கள்

இறைவன் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மனிதருக்குப் பலவித அழைப்புகளைக் கொடுத்துள்ளார். இறைத்திட்டத்தை நிறைவேற்றுவதே இதன் நோக்கம். இவர்கட்கு விசேட அருட்கொடைகளைக் கொடுத்திருந்தார். அவர்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள் எதிர்வந்தபோதிலும் அஞ்சாமல் தம் பொறுப்பை நிறைவேற்றினர். இத்தகையோர் சிலரை நாம் அறிவது நல்லது.

### 1) புனித பவுல்:

"தர்சு நகர சவுல்" எனப்பட்ட இவர் பெஞ்சமின் கோத்திர, யூதா குடும்பத்தில் பிறந்தவர். கமாலியேலிடம் உயர்கல்வி கற்றவர். யூதரிடையே பிரபல்யமடைந்திருந்தார். ஆனாலும் கிறிஸ்துவை அறியாதவராயிருந்தார். எனவே, அனுமதி பெற்று கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார். இதற்காகத் தமஸ்கஸ் நகருக்குச் சென்றபோது ஒளிப்பிளம்பொன்றைக் கண்டு கீழே வீழ்ந்தார். கண்பார்வையிழந்தவரானார். இயேசு அவருடன் பேசி அவரை மனமாற்றம் பெறச்செய்தார். திருமுழுக்கு அருளப்பட கண்கள் மீண்டும் பார்வைபெற்றன. அன்று முதல் கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்தார். பிற இனத்தவரின் திருத்தூதராகும் பேறு பெற்றார். தமஸ்கஸில் போதித்தார். ஜெருசலேம் நகர ஆலோசனைச்சங்கத்திடம் வாதாடி, திருமுழுக்கைப் பெறுபவன் கிறிஸ்தவனாகமுடியும் என எண்பித்தார். பல துன்பங்கள் பட்டார், சிறைவாசம் செய்தார். யூதர் எதிர்பார்த்த மெசியாவே கிறிஸ்து என்பதனை உறுதிப்படுத்தினார். புறவினக் கிறிஸ்தவச் சபைகளை ஏற்படுத்தினார். அச்சபைகளில் பிரச்சினை ஏற்படுகையில் பல திருமுகங்கள் எழுதியனுப்பினார். திருவிவிலியத்தில் 13 திருமுகங்கள் உண்டு. மூன்று பயணங்கள் செய்துள்ளார். அவ்வாறான ஒரு பயணத்தின் போது உயிர் நீத்தார்.

#### முதலாவது தூதுரைப் பயணம்:

பர்ணபா, யோவான், மாற்கு ஆகியோர் சென்றனர், சீரியா அந்தியோக்கியாவிலிருந்து, செலுக்கியா, சாலமி, பாப்போ, பெருகை, இக்கோனியா, லிஸ்தீரா ஆகிய இடங்களில் போதனையும், கிறிஸ்தவ சபைகள் நிறுவுதலும் இடம் பெற்றன.

#### 2வது தூதுரைப் பயணம்

சீரியாவின் அந்தியோக்கியாவிலிருந்து லிஸ்திரா, இக்கோணியா, பிரிதியாவின் அந்தியோக்கியா, எபேசு, துரோவா, பிலிப்பு, பெரேயா, கொரிந்து, ஏதென்ஸ் வரை நற்செய்தி கொண்டு செல்லப்பட்டது.

#### 3வது தூதுரைப் பயணம்

- சீரியா அந்தியோக்கியாவிலிருந்து தெருபை, லிஸ்திரா, இக்கோணியா, எபேசு, துரோவா, தெசலோனிக்கா, பெரேயா, ரோது, தீர், செசாரியா, ஜெருசலேம் வரை நற்செய்தி போதிக்கப்பட்டது.

- இவரது மறைபரப்புத் தூதுரைப் பயணங்களின் பயனாக புறவினத்தாருக்குச் சபைகள் நிறுவப்பட்டன. ஏராளமான மக்களுக்குத் திருமுழுக்கு வழங்கப்பட்டது. இதனால் இவர்கள் திருச்சபை அங்கத்தவராயினர். எபேசு மறைபரப்பு மையமாகக் கொள்ளப்பட்டு இரண்டு வருடங்களுள் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நற்செய்தி பரப்பப்பட்டது.

- **பவுலுக்கு ஏற்பட்ட இடையூறுகள்.**

1. பிலிப்பியில் சிறைப்படல்
2. இக்கோணியாவில் தமது விரோதிகளுக்கு முகங் கொடுத்தல்.
3. லிஸ்திராவில் யூதமக்களால் கல்லெறிந்து நகருக்குப் புறம்பே தள்ளப்படுதல்.
4. பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியாவில் நற்செய்தியைப் போதித்தபோது நாத்தீக யூதரின் விரோதத்திற்காளாதல்

இவற்றில் பவுலின் துணிவும், இறைப்பற்றும் வெளிப்படுகின்றன. இவரைப் போல நாமும் கிறிஸ்துவுக்குச் சான்றுபகர வேண்டும்.

### 2) புனித பிரான்சிஸ் சேவியர்:

கி.பி 1506ல் ஸ்பெயினில் உள்ள நவார் என்னும் பிரதேசத்தில் உள்ள நகரமொன்றில் பிறந்த புனித பிரான்சிஸ் சேவியருடைய தந்தையின் பெயர் யோவான் டி சூசை, தாயின் பெயர் தொன்மரியா. உயர் செல்வக் குடும்பத்தில் பிறந்த இவர் சிறுபராயந் தொட்டுக் கல்வியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்து விளங்கியதால், பரீஸ் நகரத்தின் புனித பார்பரா வித்தியாலயத்திற்கு அனுப்பப்பட்டார். ஆசிரியர்க்குக் கீழ்ப்படிந்து மிகவும் ஆர்வமுடன் கற்றுப் பின்னர் பட்டம் பெற்றுத் தத்துவ ஞானம் கற்பிக்கும் ஆசிரியரானார். இளைஞரான இவர் உலகத்தின் பெருமை, மதிப்பு ஆகியவற்றைப் பெறும் நோக்குடன் உயர்மட்ட நண்பர்களுடன் தொடர்பு கொண்டார். இக்னேஷியஸ் லொயோலாவின் தொடர்பு அவரது வாழ்வை மாற்றியது. ஒருவன் முழு உலகையும் தனதாக்கிக் கொண்டாலும், தன் ஆன்மாவை இழந்தால் அவனுக்கு என்ன பயன் என்ற வார்த்தையை இக்னேசியஸ் லொயோலா அடிக்கடி பிரான்சிசுக்கு ஞாபகப்படுத்திக் கெட்ட நண்பர்களிட மிருந்து தன்னைக் காப்பாற்ற அறிவுரை கூறினார். இதனால் தம்வாழ்வை மாற்றி, இயேசு சபைக் குருவானார். காலைத் திருப்பலியை முடித்து விட்டு வைத்திய சாலையிலுள்ள நோயாளிகளையும், சிறைச்சாலைக் கைதிகளையும் சந்திப்பதை வழக்க மாகக் கொண்டார். ஏழைகளுக்கு உதவினார். திருமறையைக் கற்றார்.

**பிரான்சிஸின் தூதுரைப்பணி:**

இந்தியா செல்லும் போது வழியில் மொசம்பிக் என்னும் முஸ்லிம்கள் வாழும் தீவுக்குச்சென்று பணிபுரிந்தார். பின் கப்பலில் சுமத்திரா தீவு சென்று அங்கு குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். பின் கோவா சென்றபோது அவர்களால் வரவேற்கப்பட்டார். அம்மக்களின் வாழ்க்கை கவலைக்கிடமானதாகக் காணப்பட்டதால் சமய உணர்வை ஏற்படுத்தினார். இதனால், இந்தியாவின் திருத்தூதர் என்று அழைக்கப்பட்டார். மலேசியா, சிங்கப்பூர், யப்பான் ஆகிய நாடுகளில் மறைபரப்புப் பணியாற்றிவிட்டு சீனாநோக்கிச் செல்லும் வழியில் மரணித்தார். சீனாவில் அடக்கம் பண்ணப்பட்ட இவரது திருவுடல் அழியாமல் இருந்ததால் வெளியே எடுக்கப்பட்டு 2ம் தடவையாக மலாக்காவில் அடக்கஞ்செய்தனர். பின்பு கோவாமக்களின் வேண்டுகோளுக்கிணங்க அங்கே கொண்டு போகப்பட்டு வைக்கப்பட்டுள்ள இவரது திருவுடல் இன்றுவரை அழியாமலுள்ளது.

▣ நமக்கும் உலகெங்கும் மறைபரப்பும் கடமையுண்டு, நாம் முன்னின்று ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் உதவிபுரியவேண்டும்.

**3) புனித பிரான்சிஸ் அசிசி:**

கி.பி 1182ம் வருடம் இத்தாலிநாட்டு அசிசி பட்டினத்தில் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த பிரான்சிஸ் சிறுபராயம் தொட்டுக் கல்வியில் சிறந்து விளங்கினார். பாட்டுப்பாடுவதிலும், இயற்கையழகை இரசிப்பதிலும் ஆர்வங்காட்டினார். 19 வயதானபோது நாட்டில் யுத்தமேற்பட்டதன் காரணமாகப் படையில் சேர்ந்தார். எதிரிகளால் சிறைபிடிக்கப்பட்டுப் பின் விடுதலையானார். அசிசி சென்றார். அங்கு இறைவனின் அழைப்புக்குச் செவிமடுத்தார். தகர்ந்து இடிந்து கிடந்த திருச்சபைக்குப் புத்துயிரூட்டும் பணியிலீடுபடத் தந்தை விடாமல் தடுத்தார். எனவே, தமது செல்வ சுகபோக வாழ்வைத் துறந்து இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்தார். திருச்சபை இக்காலகட்டத்தில் பதவிப்பேராசை, சுகபோக வாழ்வு போன்றவற்றிற்கு அடிமையாகி, எளிமை நேர்மை போன்றவற்றிலிருந்து விலகி லௌகீக வாழ்வில் ஆழ்ந்திருந்தது. இந்நிலையிலிருந்து திருச்சபையை விலக்கி உன்னதநிலை பெறச் செய்யவே இறைவன் அவரை அழைத்தார். எளிமையாக வாழ்ந்த பிரான்சிஸ் இயற்கையில் இறைவனை அனுபவித்து மகிழ்ந்தார். திருச்சபையை மெல்ல வேறுபாதைக்குத் திருப்பினார். துறவற வாழ்வுக்குப் புத்துயிர் அளித்தார். கீழ்ப்படிவு, ஏழ்மை, கற்பு என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட ஒரு துறவறச்சபையை உருவாக்கினார். கபிலநிற ஆடையணிந்து, இடையில் கயிறு கட்டிக் கொண்டார். பாடல்களைப் பாடிக்கொண்டே சமாதானத்தையும், அன்பையும் பரப்பிய வண்ணம் பணிபுரிந்த அவரது சமாதானப் பாடல் மிகவும் பிரபல்யமானதாகும்.

▣ பாடசாலை மாணவர்களாகிய நீங்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பைச் செய்யவேண்டும். திருப்பாலத்துவசபையில் சேரலாம். படைப்பை மதித்து விருத்திசெய்ய முன்வர வேண்டும். ஆன்மீகத்தை வளர்ப்பதில் ஈடுபடவேண்டும். சிறு கருமத்தையும் கவனத்துடன் செய்ய வேண்டும். நல்ல பாதையில் செல்ல வேண்டும். ஒப்புரவு திருவருட்சாதனத்தைப் பெறுவதில் ஆர்வம் காட்டவேண்டும். நண்பர்களையும் நல்ல வழியில் நடத்தவேண்டும்.

- மெற்றில்டா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

முன்னாள் இந்தியப்பிரதமர் ஜவகர்லால் நேரு சிறையில் இருந்தபோது தனது மகள் இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்கள் பிரசித்தி பெற்றவை. அதேபோன்றுதான் அமெரிக்காவின் 16வது ஜனாதிபதியாக விளங்கிய ஏபிரஹாம் லிங்கன் அவர்கள் தனது மகன் படித்த பாடசாலையின் அதிபருக்கு அனுப்பிய கடிதமொன்றும் பிரபல்யமானது. அக்கடிதத்தினை இம்முறை இலக்கிய மஞ்சரியில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

'அதிபர் அவர்களே, மனிதர்கள் அனைவரும் உண்மை பேசுபவர்களாயும், நீதிநியாயம் கொண்டவர்களாகவும் நடந்து கொள்ளமாட்டார்களென்பதனை எனது மகனுக்குச் சொல்லிக் கொடுங்கள். இதனை அவனுக்குக் கற்பியுங்கள். ஒவ்வொரு போக்கிரிப் பயலுள்ள இடத்திலும் கெட்டிக்காரர் ஒருவர் இருக்கின்றார் என்பதனையும், ஒவ்வொரு சுயநலவாத அரசியல் வாதிகள் இருக்கும் இடத்திலும் அர்ப்பணிப்புடைய தலைவரொருவர் இருக்கின்றார் என்பதனையும் எனது மகனுக்கு எடுத்துச் சொல்லுங்கள். பகையாளிகள் இருக்கின்ற இடங்களில் நண்பரொருவர் இருக்கின்றார் என்பதையும் அவருக்கு எடுத்துக் கூறுங்கள். அதேபோன்று இனாமாக எவரிடமிருந்தோ, எவ்விடத்தில் இருந்தோ கிடைக்கின்ற ஐந்து டொலர்களைக் காட்டிலும் தமது வியர்வை சிந்தி உழைக்கும் டொலரொன்று பெறுமதி வாய்ந்தது என்பதையும் எனது புதல்வருக்கு எடுத்துக் கூறுங்கள். இந்த உண்மைகளை அவருக்குப் புகட்டுவதற்குச் சில காலம் எடுக்கும் என்பதை நான் அறிவேன். எனினும் அந்த உண்மையை அவருக்குக் கற்பியுங்கள்.

தோல்வியினைத் தாங்கிக் கொள்வதற்கும், வெற்றியினை பணிவடக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொள்வதற்கும் எனது மகனுக்குச் சொல்லிக் கொடுங்கள். பொறாமை கொண்டவர்கள் சிலர் அவரை அடக்கவும், அகற்றிவிடவும் முயலும் போது அதுபற்றி மனக்கிலேசம் கொள்ளாது அமைதியாக இருந்து உள்ளூரச் சிரிக்கக்கூடிய ஆன்மீகச் சக்தியின் இரகசியத்தை அவருக்கு எடுத்துக்கூறுங்கள். தமது உடல் வலிமையினைக்காட்டி மனிதர்களை அச்சுறுத்துபவர்களை எளிதில் தோற்கடிக்க முடியும் என்பதனையும் அவருக்கு அறிவுறுத்தவும்.

அதிபர் அவர்களே! இயலுமானால் நூல்களில் உள்ள இலக்கியச்சுவையினைப்பற்றி எனது புதல்வனுக்கு எடுத்துக்கூறுங்கள். அதுமட்டுமல்ல, வானத்தில் பறக்கின்ற குருவிகளும், கதிரவனின் ஒளிக்கீற்றுக்களில் பறக்கின்ற தேனீக்களும், பச்சைப்பசேல் என்று மலையடிவாரத்தில் பூத்துக் குலுங்குகின்ற காட்டு மலர்களும் எடுத்துச் சொல்லுகின்ற அற்புத அழகினைப்பற்றி தனிமையில் சிந்திக்கும்படி அவரைத் தூண்டுங்கள்.

வஞ்சனை செய்வதைக்காட்டிலும் கள்ள வேலைகள் செய்வதைக்காட்டிலும், தோல்வியை ஏற்றுக்கொள்வது கௌரவமான செயலென்பதனையும், பிறர் எதனைக் கூறினாலும், தமது சரியான கருத்துக்களை நம்பிச் செயல்படுவது சிறந்தது என்பதனையும் எனது மகனுக்கு எடுத்துக் கூறுங்கள்.

அதிபர் அவர்களே!, இனிய சுபாவமுள்ளவர்களிடம் இனியமுறையில் நடந்து கொள்வதற்கும் கொடிய இயல்புடையவர்களிடம் கடுமையாக நடந்து கொள்வதற்கும், தம்மைச் சுற்றியுள்ளவர்கள் செய்வனவற்றை கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாமல், தமது அறிவினைப் பயன்படுத்திச் செய்யக் கூடியவற்றையும், செய்யக்கூடாதனவற்றையும் புரிந்து கொண்டு செயல்படும் ஆற்றலை அவருக்கு வழங்குங்கள்.

அனைவரினதும் பேச்சுகளைச் செவிமடுக்க வேண்டுமென்பதை அவருக்குப்புகட்டுங்கள். எனினும் தாம் கேட்டவற்றின் உண்மையினை அலசி ஆராய்ந்து நல்லவற்றை மட்டும் ஏற்றுக் கொள்ளும் வல்லமையினை அவருக்கு வழங்குங்கள்.

எத்தகைய இடர்கள் ஏற்பட்டாலும் துன்பப்படாமல் சிரிக்கும் விதத்தினை அவருக்குக் காட்டுங்கள். கண்ணீர் விடுதல் வெட்கத்திற்குரியதல்ல என்பதையும் அவருக்குக் கற்பியுங்கள். எல்லாவற்றிலும் பிழைகாண்பவர்களை அசட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணவும், இனிய பசப்பு வார்த்தைகளைக் கேட்டு ஏமாற்றம் அடையாமல் இருப்பதற்கும் அவருக்கு வழிகாட்டுங்கள். தனது உடல் சக்தியினையும் சிந்தனைச் சக்தியையும் அதிக விலை கூறுபவர்கட்கு விற்பதாயினும் தனது இதயத்தை எப்பொழுதும் விலைக்கு விற்க வேண்டாம் என்று அவருக்குச் சொல்லிக் கொடுங்கள். பகட்டுக் கோஷங்களை எழுப்புகின்ற சனங்கள் மத்தியில் காதினை மூடிக் கொண்டு இருக்கும் தைரியத்தை அவருக்குக் கொடுங்கள். தான் உண்மையென ஒப்புக் கொண்டவற்றிற்காக தைரியத்தோடு போராட அவருக்குக் கற்பியுங்கள்.

அதிபர் அவர்களே!, அவரிடம் மெதுவாக மெதுவாக நடந்து கொள்ளுங்கள். ஆனால் அவரிடம் செல்லமாக நடந்து கொள்ள வேண்டாம். நெருப்பில் காய்ச்சினால்தான் உருக்கினை நன்றாக வார்க்கமுடியும் என்பதனை அவருக்குத் தெளிவுபடுத்துங்கள். எனவே வாழ்க்கைப் பயணத்தின்போது தமக்கு அதிகபேரிடர்கள் ஏற்பட்டால் அதனைத் தாங்கிக்கொண்டு இரும்பு மனிதராக முன்னேறுவதற்கு அந்த அனுபவம் அவருக்கு உதவும் என்பதனை எடுத்துக் கூறுங்கள்.

தமக்கு ஏற்படும் அமைதியின்மையை அவர் நெஞ்சுறுதியோடு தாங்கிக் கொள்ளுதல் வேண்டும். அஞ்சா நெஞ்சம் உடையோருக்குத் தேவையான பொறுமை அவருக்கு இருத்தல் வேண்டும். எப்போதும் தம்மைப்பற்றிய உறுதியான விசுவாசத்தை அவருக்குக் கற்பியுங்கள். தம்மீதும் அவர் நம்பிக்கையுடன் இருக்கமுடியும். அவருக்கு இந்த அறிவையூட்டுவது பாரதூரமான காரியம் என்பது எனக்குத் தெரியும். எனவே அதிபர் அவர்களே!

உங்களால் இயன்ற எல்லாவற்றையும் எனது புதல்வரின் நன்மைக்காகச் செய்யுங்கள். எனது புதல்வர் அதற்கேற்ப மனவுறுதியும் உடலுறுதியும் பெறுவார் என்ற நம்பிக்கையுண்டு.

**ஏப்பிரஹாம் லிங்கன்**

# பாலையூற்று தேவகுமாரியின் நூல் வெளியீடு

பாலையூற்றின் வரலாற்றில் முதல் தடவையாக இப்பங்கினைச் சேர்ந்த இளம்பெண் எழுத்தாளர் செல்வி. இராசையா தேவகுமாரியின் கன்னிப் படைப்பான **"மராங்கொத்தியைத் தேடும் மரக்கட்டைகள்"** எனும் சிறு கதைத்தொகுதி பாலையூற்று லூர்த்து அன்னை திருத் தலத்தில் 09.07.2006 அன்று ஞாயிறு காலைத் திருப் பலியினைத் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி. அல்பன் ராஜசிங்கம் **O.M.I.** தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் போது எழுத்தாளரும் உதவிக் கல்விப்பணிப்பாளருமாகிய திரு.**K.** கிறிஸ்ரி முருகுப்பிள்ளை இந்நூலிற்கான ஆய்வுரை நிகழ்த்தும்போது "தேவகுமாரியின் இக்கன்னிப் படைப்பானது அவரது ஆற்றலுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகவும் இக்கிராமத்தின் வெளிப்பாடாகவும் அமைகின்றது. இந்நூலிற்காக உருவாக்கப்பட்ட தலைப்பின் விளக்கம் தேவகுமாரிக்கே வெளிச்சம். இதில் இடம் பெற்றுள்ள சிறுகதைகள் 2-3 பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதியிருப்பது சிறப்பு. எதிர்காலத்தில் சிறுகதைகள் நீண்ட நெடுங்கதைகளாக அமைய வேண்டி ஆசிக்கின்றேன்" என்று கூறினார்.

இந்நூலின் முதல் பிரதியினை பங்குத்தந்தையும் மேலும் சில பிரதிகளை பாலையூற்று சமூகத்தின் பிரமுகர்கள் சிலரும் பெற்றுக் கொண்டு தமது ஆதரவினையும் பாராட்டுதலையும் வழங்கி எழுத்தாளரை ஊக்குவித்தனர்.

**தகவல்:** G. அல்பேட்
பாலையூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தொங்கிக் கொண்டிருக்கும் மனித உரிமைகளும் தொலைந்து போன மனிதாபிமானமும்

மனிதன் வாழ்வதற்கென்றே பிறந்த உயிரி, இதனால் அவன் உயிர்வாழ்தல் என்பது இயற்கையாக நிகழும் ஒன்று. இவ்வுலகில் அவதரித்த ஒரு குழந்தை காலம் செல்லச் செல்ல உடலிலும் உள்ளத்திலும் மனப்பாங்கிலும் ஒழுக்கத்திலும் வயதிற்கேற்ப விருத்தியடைந்து முழுமை அடைய வேண்டுமென்பதே பிள்ளை விருத்தி பற்றிய இயற்கைக் கோட்பாடாகும். இம் மன விருத்தித் தத்துவம், மனிதத்துவக் கோட்பாடு, உளப்பகுப்புக் கோட்பாடு, சிந்தனைவளர்ச்சிக் கோட்பாடு, சமூக உளவியல் கோட்பாடு என்றவாறு முறையே ஏப்பிரகாம் மாஸ்லோ, சிக்மன்ட்பு ரொயிட், ஜீன்பியாஜே, எரிக்எரிக்சன் போன்ற உளவியலாளர்களால் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதற்கு முன்பே யேசுக்கிறிஸ்துநாதரும், முகம்மது நபிகள் நாயகமும், புத்தபிரானும் மனித விருத்தி, மனித நேயம் என்பனபற்றி போதனைகளில் மட்டுமல்லாது வாழ்ந்தும், செயற்படுத்தியும் காட்டியுள்ளனர்.

இவ்வுலகில் எப்பகுதியிலாவது மனித உருவில் பிறந்த ஒருவர் வளர்ச்சிபெறுவதற்கும் விருத்தியடைவதற்கும் மிகக் குறைந்தளவிலான வசதிகளும், உரிமைகளும் பெற்றிருக்கவேண்டுமென்பது மனிதாபிமானத்துடன் தொடர்புடைய மற்றுமொரு தத்துவமாகும்.

**மனித உரிமைகள் எவை? அவை எங்கிருந்து உருவெடுக்கின்றன?**

தற்காலத்தில் அரசுகள் தம் மக்களுக்கு உரிமைகள் பலவற்றை வழங்கியுள்ளன என்பதை நாம் அறிவோம். இவ் அரசுகள் உரிமைகளை வகைப்படுத்தியும், பட்டியலிட்டு வரையறை செய்தும் அரசியல் யாப்புக்கள் போன்ற அரசியல் ஆவணங்களில் இடம் பெறச் செய்தும் உள்ளன. இது எத்தகையதாயினும் மனிதன் பிறக்கும் போதே தவிர்க்கவும், தடுக்கவும் முடியாதவாறு அவனுக்குச் சில அடிப்படை உரிமைகள் கிடைத்துவிடுவதாக பிரபல்லியமான பல அரசியல் ஞானிகளும் தத்துவ ஞானிகளும் கூறியுள்ளனர். கர்ணன் பிறக்கும் போதே சூரிய பகவான் அவனைக் கவச குண்டலத்தோடு பிறக்கச் செய்தான் என்பது போல, மனிதன் பிறக்கும் போதே அவன் இரத்தத்திலும், தசையிலும் எலும்புகளிலும் அடிப்படை உரிமைகள் ஒட்டியிருந்தன. இவை பிரிக்கப்படவோ, இன்னொருவரால் கவரப்படவோ முடியாதவை. மனிதனின் உடலும், உள்ளமும், உரிமையும் பிரிக்க முடியாத முப்பரிமாணங்கள் ஆகும். உடலை அழித்தால் அவர் தம் உள்ளமும், உரிமையும் தானகவே அழிந்துவிடும் என நினைப்பது மாபெரும் மடமைத்தனம் என்பதைக் கடந்தகாலங்கள் எமக்கு நிரூபித்துள்ளன.

உரிமை என்பது ஒழுக்காறு, உணர்வுகள், பாரம் பரியங்கள், பண்பாடுகள் போன்றவற்றுடன் பின்னிப் பிணைந்த மிக உயரிய விழுமியமாகும். இவை வெறும் இலட்சியங்களோ அவாக்களோ அல்ல. அவை அறம் சார்ந்த நன்மையபக்கும், மனித நிலையை மேம்படுத்தும் உண்மைகளாகும். இவ் அடிப்படை உரிமைகளை யாரும் எவருக்கும் வழங்குவதோ அல்லது இடை நடுவில் பறித்து விடுவதோ தாங்கிக் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத தொன்றாகும்.

உயிர்வாழ்வதற்கு இயல்பாகவே மனிதன் பெற்றுள்ள இவ்வுரிமைகள் "அன்று உலகம் உருவாக்கப்பட்டபொழுது ஆதாம், ஏவாளை நோக்கி, நீங்கள் இவ்வுலகில் மகிழ்ச்சியாக வாழ்வதற்குப் படைக்கப்பட்டவர்கள் என்று இறைவன் கூறினாரே! அக்கணமே இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்டவை. எனவே உரிமைகள் மனிதன் இவ்வுலகில் மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும், கௌரவமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு உதவுகின்றன என்பது வெளிப்படை உண்மையாகும்.

இன்று எமது இலங்கை நாட்டில் தமிழ் மக்களுக்கு வாழும் உரிமை நசுக்கப்பட்டுள்ளது: கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏன் சில பிரதேசங்களில் முற்றாக மறுக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். சொந்த ஊரில் வாழ முடியாத நிலை. குடும்ப உறுப்பினர் கண்முன்னாலேயே படுகொலை, அரைப்பட்டினி, சுத்தமான காற்றும் நீரும் கூட கிடைக்காத நிலை, போஷாக்கின்மை, தொற்று நோய்கள், அத்தியாவசிய மருந்துப் பொருள்கள், குழந்தைகளுக்கான பாலுணவுகள் போன்றவற்றுக்குப் பலத்தட்டுப்பாடு, மொத்தத்தில் வாழும் உரிமைகள் தொங்கிக் கொண்டிருக்கிறது. உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

உயிர்வாழ்வதற்கான உரிமைகள் போன்றவை எங்கிருந்து பிறக்கின்றன எனக் கேட்டால் அதற்கான பதில் மிகவும் எளிமையானதாகும். ஒரு நாட்டில் வாழும் இனம் திடீரென்று தோன்றியதல்ல. அதற்கென்று ஒரு நீண்ட வரலாறு, பாரம்பரியம், வழக்காறுகள், பண்பாடுகள் உள்ளன. எனவே ஓர் இனம் தனது வாழ்வைத் தக்க வைத்துக் கொள்ளும் தேவைகளை இவற்றினூடாக நிறைவேற்ற முற்பட்ட போது உரிமைகள் தோற்றம் பெற்றன. இவ் உரிமைகளில் சில மாற்ற முடியாததாகவும் மேலும் சில காலத்தின் தேவைக்கேற்ப மாற்றமடையக் கூடியதாகவும் உள்ளன. இவ் உரிமைகளை ஓர் இனம் ஒழுங்குபடுத்தவும், அனுபவிக்கவும், பேணவும் அரசும் அரசாங்கமும் உதவ வேண்டுமேயொழிய ஓர் அதிகார அமைப்பு அல்லது தனி நபர்கள் கொண்ட குழு அடிப்படை உயிர் வாழும் உரிமைகளைத் தீர்மானிப்பதற்கு அவற்றுக்கு அதிகாரமளிப்பது ஏற்புடையதல்ல.

சகல தனிமனிதர்களுக்கும் இன, மத, சாதி, பால்வேறுபாடின்றி சுயவழிப்படுத்தப்பட்ட விருத்தியை அடைய உரிமையுண்டு என்பதைப் பொறுப்புள்ளவர்கள், ஆட்சி செலுத்துவோர் உணர்ந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் முன்வராதபோது இந்நாடு முன்னேற்றத்தை அடைந்து கொள்ளமுடியாதென்பது நிதானமாகச் சிந்திக்கும் அனைத்துப் புத்தி ஜீவிகளதும் கருத்தாகும்.

**மனப்பாங்குகள் எதிர்மறையாக உள்ளன; மனிதாபிமானம் தொலைந்து விட்டது. ஏன்?**

மனப்பாங்கு என்பது தனியாள், பொருள்கள், சொல்கள், நிகழ்வுகள், கருத்துக்கள் என்பன உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ சிந்திப்பதற்கு அல்லது செயற்படுவதற்கு தனியாளைத்தூண்டுகின்ற மதிப்பீடாகும். அதாவது மனப்பாங்கு என்பது எப்பொருள் மீதும் செலுத்தப்படுகின்ற மதிப்பீட்டுக் கண்ணோட்டமாகும். மற்றவர்களின் உரிமைகள், உடமைகள் உணர்வுகள், தேவைகள் ஏன் உயிர்கள் மீதும் கூட எதிர்மறை மனப்பாங்கைக் காட்டுதல், மானிடப் பிறவி இயற்கையில் நல்லதே எனப் போதித்த பௌத்த சமயம், இந்துசமயம் போன்றவற்றின் தத்துவங்களுக்கு முரணானதாகும். ஏன் இந்த எதிர்மறை மனப்பாங்கு? இரக்க மனப்பாங்கும், மன்னிக்கும் மனப்பாங்கும் இருக்கவேண்டிய இடத்தில் கொலை மனப்பாங்கும், பொய் கூறும் மனப்பாங்கும் மேலோங்கி உள்ளது. உண்மை என்று தெரிந்தும் அதில் சிறிதளவேனும் ஏற்றுக்கொள்ள மறுப்பதும், உண்மையை மறைக்க அப்பட்டமாகப் பொய் கூறுவதும் சகோதர சிறுபான்மை இனத்தின் முன்னேற்றங்களை, விடிவை தடுத்து நிறுத்துவதும் எமது நாட்டின் அரசியல் கலாசாரத்தில் பெரும்பான்மைத் தலைவர்களால் வழிவழியாகப் பின்பற்றப்பட்டுவரும் மதிப்பிடத்தக்க பாரம்பரியங்களாகும். இத்தகைய மனப்பாங்கு நிச்சயம் தோல்வியையே பெற்றுத் தரும் என்பது அவர்களுக்குப் புரியாததல்ல.

பௌத்த தர்மத்திலே தோல்விக்கு எம்மை வழிநடத்தும் ஐந்து பலவீனங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவையாவன:

1. உயிர்க்கொலை
2. கொடுக்கப்படாததை எடுத்துக் கொள்ளல்
3. காமம் சார்ந்த தீச்செயல்கள்
4. பொய்மை
5. சோம்பலை உண்டாக்கும் மதுவை அருந்துதல்

அறவழிப் பயிற்சிக்குத் தடைகளான இவ்வைந்தும் தகர்க்கப்படுமாயின் நல்மன நோக்குகள் நான்கு உருவாகும் எனவும் கூறப்பட்டுள்ளது. உணர்வை உணர்வால், உடலைக் கடும் உழைப்புக்கு உரியதாய், நல்மன நோக்குடையதாய், கட்டுப்பாடுடையதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிக் கொள்ளும் துறவிக்குப் பேராசையோ உலகில் பொதுவான தான அதிருப்தியோ ஏற்படுவதில்லை. எவரொருவர் உயிர்க் கொலை, பிறர்பொருள் கவர்தல், புலன் உணர்ச்சியில் பிழைபுரிதல் ஆகியவற்றிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்கிறாரோ அவருடைய இச்செயல் உணர்வுத் தூய்மை எனப்படுகின்றது.

எவரொருவர் பொய்மை, பயனில்சொல், புறம் பேசுதல் ஆகியவற்றிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்கிறாரோ அவருடைய இச்சொல் உரைத் தூய்மை எனப்படுகிறது. இவ்வாறே பௌத்த தர்மம் ஒழுக்கத்தில் தவறு, உள்ளத்தில் தவறு, கருத்தில் தவறு எனத் தவறுகள் மூன்றையும் வகைப்படுத்திக் காட்டியுள்ளது.

பௌத்த தர்மம் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிப்படர்ந்துள்ள இந்நாட்டிலே பெரும்பான்மையான மக்கள் பௌத்தர்களாகவும் பெருந் தொகையான பௌத்தத் துறவிகளும் நிறைந்துள்ள நிலைமையிலே அரசியல் பிரமுகர்களும் நாட்டின் தலைவர்களும் பௌத்தர்களாகவே இருந்து வரும் சூழ்நிலைகளிலே மனங்களில் அறிவாக, சிந்தனைகளாக ஊடுருவிப் பாய்ந்துள்ள பௌத்த தர்மம் நடத்தைகளிலும் செயல்களிலும் தொலைந்து காணாமல் போய்விட்டதேனோ? சிறு பான்மை மக்களின் அடிப்படை மனிதாபிமான உரிமைகள் (உயிர் வாழும் உரிமை) அறுந்து விடும் நிலையில் தொங்கிக் கொண்டிருப்பதேனோ?

பாடசாலையில் பயிலும் சிறார்களுக்கும், மாணவர்களுக்கும் படிப்பதற்கும், மனனம் செய்வதற்கும் மட்டுமா மனப்பாங்கு, மனிதாபிமானம், உரிமைகள், ஒழுக்கம் போன்ற விடயங்கள் உள்ளன? இவை பாடநூல்களிலும் அரசியல் மற்றும் ஏடுகளிலும் வெறும் அலங்காரப் பொருளாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது ஏன்? பொறுப்புள்ளவர்களுக்கும், ஆட்சி செய்பவர்களுக்கும் இவற்றிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதா? உண்மைக் கல்வி இன்றில்லை, உண்மைத் தலைவர்கள் இன்றில்லை என்ற இன்றைய நிலை மிகவும் ஆபத்தானது. நல்லொழுக்க சீலங்கள் நிறைந்த மேலை நாட்டுக் கல்வி முறையிலே "Fear of God is the beggining of Knowladge" என்ற தத்துவம் காணப்பட்டது. பலமதக் கலாசாரம் நிறைந்த நாடாக எமது நாடு உள்ள போதிலும் இறைபயம், பக்தி எம்மிடையே மிகமிகக் குறைவாகவே உள்ளது. இறைவன் தண்டிக்கத் தொடங்கினால் அதற்கு எந்நிலையிலுள்ளவர்களும் தப்பமுடியாது. எவ்வாறாயினும் இந்நாட்டில் உயிர் வாழ்வதற்குப் போராடும் மக்கள் உரிமை வாழ்வை அடையும் காலம் அதிக தொலைவில் இருப்பதாகத் தெரியவில்லை.

**உண்மை என்பது**
**அழிந்துவிடாது**
**அது தெய்வத்தின்**
**மொழியாகும்.**
**நன்மை என்பது**
**நாளை வருகின்ற**
**நம்பிக்கை மொழியாகும்.**

**-சகாயம்**

## அதிக நம்பிக்கை ஆபத்து!

சார்லி சாப்ளினின் 50வது பிறந்தநாளை இங்கிலாந்து முழுவதும் கொண்டாட முடிவெடுத்தனர். ஒவ்வொரு ஊரிலும் சாப்ளின் நாடகம் நடத்தப்பட்டது. எவர் சிறப்பாக நடிக்கிறாரோ அவரைத் தேர்ந்தெடுத்து மாவட்ட அளவு போட்டிக்கும், மாவட்ட அளவில் வெற்றிபெறுபவர்களில் ஒருவரைத் தேசிய அளவிலும் பங்கு பெறச் செய்தனர். கடைசிச் சுற்றில் சாப்ளின் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் போட்டியில் பங்குபற்றினார். தேர்வாளர்கள் அவருக்கு இரண்டாவது இடத்தை அளித்தனர். பின்புதான் தெரிந்தது அவர்கள் உண்மையான சாப்ளினுக்கு இரண்டாம் இடத்தை அளித்தது. 'அதிகமான நம்பிக்கை கூடாது என்பதைப் புரிந்து கொண்டேன்' என்றார் சார்ளி சாப்ளின்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகின் அலங்காரம்

(தொடர்கதை)

-சா(ஜ)ஹான்

யோவ்! கொஞ்சம் புரியும் படியா சொல்லேன்யா... ஏன் சேர்? இது புரியலியா ? பின்ன என்னய்யா அழகுக்கு ஏன் அலங்காரம் தேவையிங்கிறா? இப்பதான் எல்லோருமே சிம்பிலா ஜதார்த்தமா இருக்கிறதத்தானே விரும்புறாங்க... சேர் நான் சொல்லுற அலங்காரம் வெறும் சாயப்பூச்ச சொல்லல சேர், எந்தவிதமான சாயப் பூச்சுகளும் **(Makeup)**, இல்லாத, எந்தவித மான மிகைப்படுத்தலும் இல்லாத.... சும்மா கச்சிதமான.... இன்னொரு விதமா சொல்லுறதா இருந்தா வச்சத வச்சமாதிரி, போட்டத போட்ட மாதிரி இருக்கிற தத்தான்.... ஆனா அதில்தான் சேர் இருக்கு ஓர் ஸ்பெஷாலிட்டி... என்னவோப்பா அந்த "அலங்காரத் தப்பற்றி" சொல்லனும் என்னு முடிவெடுத்திட்டா.... அந்த முடிவ நீ மாத்தப்போறதே இல்ல "ம்" சொல்லு, சொல்லு... பிடிச்சிருக்கா இல்லையான்னு அப்புறமா சொல்லுறன்....

O.K சேர் தாங்ஸ் (THANKS)

ஓர் அழகான குட்டிக் கிராமம். அது கடலோரக்கிராமம், கவிதை சொல்லத்துண்டும் கிராமம். செந்நிற குருமண்ணில் நெருக்கமாக ஓங்கி வளர்ந்துள்ள தென்னை மரங்கள் எப்படியும் வாழலாம், எதையும் செய்யலாம் என்ற மமதை பிடித்தாற்போல் ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு வடிவில் ஒவ்வொரு கோணத்தில் காட்சியளிப்பதுதான் தென்னந் தோப்புகளுக்கே உரித்தான அழகு. அது மட்டுமா, கடலிலே தக்கதிமிதா என்று ஆடி அசைந்து கொண்டிருக்கும் படகுகள்! கரையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள கூர்முனை ஈட்டிகளைப் போல் நேராகவே உள்ள வள்ளங்கள், வலைக்குமியல் ஒரு பக்கம் மனிதனது காலைக் கடன் குமியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் ஆங்காங்கே.... மீனவர்களின் திமிரேறிய உடம்புக்கு காரணமாய் இருப்பது கடல் நீரும், கடற் காற்றும், கடினஉழைப்பும் தானே! இவையாவற்றையும் உள் வாங்கி சுகமாய் உறங்குவதற்கு ஓரமாய் ஒய்யாரமாய் அமைக்கப் பட்டுள்ள சிறு சிறு வாடிகள். இந்த கிராமத்துக்கு இன்னுமொரு சிறப் பம்சம் உள்ளது. அது தமிழர் களும், சிங்களவர்களும் சகோதர பாசத்தோடு வாழுவதுதான். சிங்கள முதலாளியின் படகில் தமிழர்கள் வேலை செய்கிறார்கள். தமிழ் முதலாளியின் படகில் சிங்களத் தொழிலாளர்கள். இந்தத் தொழி லாளர்கள் கடலுக்குப் போனதும் இந்த முதலாளிகள் எல்லாரும் கள்ளுப் போத்தலோடு சீட்டாடுவது பலே, பலே. இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டிய விடயம் என்ன வென்றால் இவர்கள் விளையாடும் போது சிறுசிக்கல் எழுந்தால் சிங்கள முதலாளிகள் தமிழில்தான் தகாத வார்த்தைகளைப் பேசுவார் கள். அதே போன்று தமிழ் முதலா ளிகள் சிங்களத்தில்தான் தகாத வார்த்தைகள் பேசுவார்கள். கொச்சைத் தமிழிலும், கொச்சைச் சிங்களத்திலும் இந்தத் தூஷண வார்த்தைகளைக் கேட்கும் போது நமக்குச் சிரிப்புக்குப் பஞ்சமே இருக் காது. இப்படியான இந்த அழகான மீனவ கிராமத்திற்குப் பெயர் முத்தாப்பு.

இந்த முத்தாப்பு கிராமத் தில் கடற்கரை ஓரமாக அல்லாமல் சற்று வெளியே தார் றோட் பக்கமாக உள்ள பகுதியில் வசித்து வருகி றது ஒரு குட்டிக் குடும்பம்.

அய்யாத்துரைக்கும் அன்ன மேரிக்கும் இரு குழந்தைகள். மூத்தவன் சுசந்தன், இளையவள் காந்திமலர். தமிழர்களையும் சிங்களவர்களையும் சமமாகக் கொண்ட இக் கிராமத்தில் அயல்வீட்டு சோமக்காவும் அவள் குடும்பத்தினரும் சுசந்தனையும் காந்திமலரையும் அள்ளிக் கொஞ்சி விளையாடும் போது சுசந்தன் சுசந்தவாக மாறி விடுவான்; காந்திமலர் மல்காந்தியாக மாறி விடுவாள்.

அய்யாத்துரையோ கோவில் பக்கம் போகத ஓர் இந்து, ஆனால் அன்னமேரியோ ஆலயத்தையே சுற்றிச் சுற்றி வரும் மாதா பக்தை. அய்யாத் துரை நல்ல உழைப்பாளி. அவன் ஒரு மீன் வியாபாரி, அதி காலையிலேயே பெட்டி கட்டிய சைக்கிளோடு முதல் ஆளாய் மீனுக்காகக் காத்திருப்பவனும் அவன்தான், கடைசி ஆளாய்க் கள்ளு போத்தலோடு வீதி விதிமுறைகளே தெரியாமல் சைக்கிளில் வந்து திறந்த மேனி யோடும் உரிஞ்ச சரத்தோடும் வீடு வருபவனும் அவன்தான். குறை சொல்லக் கூடாது அய்யாத்துரை இரவில்தான் புலி, பகலில் களவு, பொய், சூதுவாது இல்லாத பூனை. ஊருக்குள் அவனுக்கு மதிப்பிருக் கும், வீட்டுக்கு அவனால் மதிப் பிழப்பு. பாவம் அன்னமேரி! வீட்டில் நடப்பது எதைப்பற்றியும் வெளியே சொல்லமாட்டாள். கணவன் கொண்டு வருவதை மிச்சம் பிடித்து அதில் சீட்டுப் போட்டு ஒருவாறு காலத்தை ஓட்டி வந்தாள்.

எல்லாத் தாய்மாரையும் போல் தன் சின்னஞ்சிறுமிகளை உடுத்தி அழகு பார்க்க முடியாமல் அடிக்கடி பெருமூச்சு விடுவாள். அவளின் கழுத்தில் உள்ள முத்து மாலையைப் போல் காட்சியளிக் கும் செபமாலையைத் தவிர வேறு எந்த ஆபரணமும் அவளுக் கென்று இல்லை. அவளிடத்தில் இருக்கும் சொத்துபத்துக்களெல் லாம் அவள் சேர்த்து வைத்துள்ள அக்கம் பக்கத்து பாச உறவுகள் தான். சும்மா சொல்லக் கூடாது அன்னமேரி தங்கம் போடாத கருப்பி என்டாலும் அவள் நடந்து சென்றால் கண்களையெல்லாம் ஒரு தடவை பின்னுக்குச் திரும்பி பார்க்க செய்யும் எடுப்பி. என்ன செய்வது, அய்யாத்துரையின் கள்ளில் உள்ள போதை அன்ன மேரியின் உருவத்தில் உள்ள போதையை அனுபவிக்க கொடுத்து வைப்பதில்லை.

சா(ஜ)ஹான்

மீண்டும் வருவான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலவர் நூலில் பொருந்திய தமிழ்

**ஆரணியகம் வெளியீடாக அண்மையில் வெளிவந்த பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத் தமிழ் எனும் நூல் மட்டக்களப்பில் வழங்கும் தமிழ்ச் சொற்களின் செந்தமிழ்ப் பண்புகளை எடுத்துக் கூறுவதோடு தமிழர் வாழ்வு, வரலாறு தொடர்பான பல ஆய்வுத் தகவல்களையும் தருகிறது. வாசகர்களின் நன்மை கருதி ஆசிரியர் வித்துவான் வாகரைவாணன் அவர்களின் அனுமதியோடு நூலின் சில பகுதிகளைத் தருகிறோம்.**

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலேயிருந்து வைகையேட்டிலே தவழ்ந்த பேதை"

**பா**ரதம் தந்த வில்லிபுத்தூரார் தமிழின் பெருமையையும் சிறப்பையும் மட்டுமன்றி அதன் பழமையையும் இப்படிப் பாடிப் பரவியிருக்கின்றமை கண்டு ஒவ்வொரு தமிழனும் பெருமிதமும் பரவசமும் எய்திட இயலும்.

14ம் நூற்றாண்டைச் சேர்ந்த வைணவப் புலவரான வில்லிபுத்தூராரை ஒருபடி விஞ்சுவது போல், கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குப் பின் தமிழுலகம் கண்ட மகாகவி பாரதி 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்று உலகெலாம் அறிய உரக்கப் பாடினான். அதே மகாகவி பாரதி 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று சொல்லவும் மறக்கவில்லை.

மகாகவி பாரதி காலத்தில் அவரால் ஒரு திருமண வீட்டில், 'எழுக கவிஞன்' எனப் பாராட்டப்பட்ட கனக சுப்புரத்தினம் எனும் பாரதிதாசன்

திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
பொங்கு கடல் இவற்றோடும் பிறந்த நாம்

என்று தமிழின் தொன்மையைத் தொட்டுக் காட்டிப் பரவசமடைகின்றான்.

புகழ்பெற்ற இப்புலவர் பெருமக்களைப் போல் மொழிநூல் அறிஞர்களும், தமிழ்ச் சொல் வளத்தையும், அதன் தொன்மையையும் உலகிற்கு உணர்த்தியிருக்கின்றார்கள். உதாரணமாக, பன்மொழி அறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் 'சுமேரிய மொழி பழமைமிக்கதுதான். ஆனால் அதனோடு தமிழ் மொழியை ஒப்பிடுகையில் அது இளையது' எனும் கூற்று தமிழ்த்தாயின் சிரசில் சூட்டப்பட்ட தங்கக் கிரீடமாகும்.

இவ்விதம் தமிழ்ப் பாவலர்களாலும் நாவலர்களாலும் அறிஞர்களாலும் ஏத்திப் போற்றப்பட்ட எங்கள் தமிழ்மொழியினை மேலைநாட்டு அறிஞர்களான மாக்ஸ் முல்லர் (MAXMULLER), வண பேர்சிவல் (REV. PERCEVEL), வண. ஹீராஸ் (REV. HERAS), வண போப் (REV. G. U. POPE), வண கால்டுவல் (REV. ROBERT CALDWELL), ரைஸ் டேவிட்ஸ் (RHYS DAVIDS) முதலானவர்களும் வியந்து பாராட்டியிருக்கின்றமை நமக்குப் பெருமை தருவதாகும்.

தமிழகத்தில் குறிப்பாகப் பாண்டிய நன்னாட்டில் செந்தமிழாகச் சிறப்புற்ற நம் தமிழ் மொழி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியவளம் பெற்று இலங்குவது போல் இன்றையத் தமிழகத்தோடு இணைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருந்த குமரிக்கண்டத்தின் (லெமூரியா) ஒரு பகுதியாக விளங்கிய ஈழமண்ணிலும் அது ஒரு கிளைமொழியாக வளர்ந்து வந்தமைக்குக் கடைச்சங்க காலத்தைச் (கி.மு.500- கி.பி.200) சேர்ந்த ஈழத்துப் பூதந்தேவனார் (ஈழத்துப் பூதன் றேவனார்) எனும் புலவர் பெருமகனே ஒரு நல்ல சான்றாவார்.

ஈழத்துத் தமிழ்ப்புலமையின் ஏக பிரதிநிதியாக கூடல் மாநகரில் கூடிய கடைச்சங்கத்தில் வீற்றிருந்து தமிழ்வளர்த்த இப் புலவர் பெருமகனின் ஏழு பாடல்கள் சங்க இலக்கியங்களில் (அகநானூறு-03, குறுந்தொகை-03, நற்றிணை- 01) இடம் பெற்றிருக்கின்றமை ஈழத்திரு நாட்டிற்கே பெருமை தருவதாகும்.

சங்க காலத்திற்குப் பின்பு தமிழகத்தில் தமிழ்மொழி செழித்து வளர்ந்தது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், தமிழில் தோன்றிய முதல் பௌத்த காப்பியம் மணிமேகலை, தமிழ்மறையாகப் போற்றப்படும் திருக்குறள், அறநெறி இலக்கியங்களில் குறளுக்கு அடுத்து வைத்துப் போற்றப்படும் நாலடியார், பக்தி வெள்ளம் பெருக்கொடுத்தோடிய பல்லவர் காலத்தில் எழுந்த ஆழ்வார் பாசுரங்கள், அடியார் தேவாரங்கள், அரிய திருவாசகம், காவிய காலம் எனச் சொல்லப்படும் சோழர் காலத்தில் தோன்றிய திருத்தக்கதேவரின் சீவக சிந்தாமணி, சேக்கிழாரின் பெரிய புராணம், தமிழ் இலக்கிய உலகில் மகோன்னதப் படைப்பாகப் பிரகாசிக்கும் கம்பராமாயணம் - இப்படி இணையற்ற இலக்கியங்கள் தமிழகத்தில் சிறந்து விளங்கிய காலகட்டத்தில், ஈழத்துப் பூதந்தேவனாருக்குப் பின் இந்த மண்ணின் இலக்கியப் பரப்பு வெறுமையாகவே காட்சி தந்தது.

இந்த வெறுமையைப் போக்கும் வண்ணம் ஈழத்தில் எழுந்த நூல் 'சரசோதி மாலை' ஆகும். தம்பதெனியாவின் அரசன் பண்டித பராக்கிரமபாகுவின் அவைக் களத்தில் வீற்றிருந்த தமிழ்ப் பெரும்புலவர், தேனுவரைப் பெருமாள் (வித்துவான் F.X.C நடராசாவின் ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு: பக்-26) அல்லது போசராச பண்டிதரால் 1310ல் அரங்கேற்றப்பட்ட இந்நூல் பண்டித பராக்கிரபாகுவிற்குத் தமிழில் இருந்த பற்றையும் ஆர்வத்தையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

- தொடரும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நான்கு நற்செய்திகள்

### நான்கு நற்செய்திக்குமான பொது அறிமுகம்:

நற்செய்தி என்பது

நமதாண்டவர் கொண்டு வந்த நல்ல செய்தியினைக் குறிக்கிறது. இதில் உள்ள தனிச்சிறப்பு என்னவெனில் அவரே அச்செய்தியாகவும் மாறியுள்ளார். இதனை யோவான் "வார்த்தை மனுவுருவானார்" என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார். ஆரம்ப காலத்திலேயே மெசியாவால் வந்த மீட்பினைக் குறித்த நற்செய்தியானது நாளடைவில் கிறிஸ்துவின் வாழ்வு, போதனைகளைக் கொண்டுள்ள நூலைக் குறித்தது.

மீட்பின் திட்டத்தினை நிறைவேற்ற வந்த இயேசுக்கிறிஸ்து அதனை நிறைவேற்றவும் முன்னெடுத்துச் செல்லவும் பல சீடர்களைத் தெரிந்தெடுத்து தம்மோடு வைத்துக்கொணடார். அவர்களைப் பயிற்றுவித்து, அதிகாரங்களையும் வழங்கி, உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என்று கூறியதற்கிணங்க கிறிஸ்துவின் விண்னேற்றத்தின் பின்னரும் அதனை நடைமுறைப்படுத்தினார்கள் அப்போஸ்தலர்கள்.

இவ்விதம் அப்போஸ்தலர்கள் போதித்தவற்றை பலர் எழுதத் தொடங்கினார்கள். நற்செய்தி எழுதப்பட முன்னரே கிறிஸ்துவைப் பற்றிய நூல்கள் இருந்துள் ளன. அவைகளை நாம் பாரம்பரியங்களில் இருந்து பெறமுடியும். எனவே இவைகளைத் தொகுத்து, விளக்கம் கொடுத்து, நிலமைக்கேற்ப தொகுத்து வரைந்து இறுதியில் நாம் வைத்திருக்கும் நூல்களாய் நற்செய்தி வடிவில் தரப்பட்டவைகளே மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய இந் நான்கு நற்செய்திகளும் ஆகும்.

**I மத்தேயு நற்செய்தி**

- ♦ முதல் நற்செய்தியாகக் கருதப்படுகிறது.
- ♦ கி.பி 65-80ல் அரமேய மொழியில் எழுதப்பட்டது.
- ♦ "மனிதன்" இந் நற்செய்தியின் சின்னம் ஆகும்.
- ♦ யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா இயேசு என்பதை இந்நற்செய்தி வெளிப்படுத்துகிறது.
- ♦ இயேசுவின் சீடரானதால் அவரின் வாழ்வையும், செயல்களையும், போதனைகளையும் நிறைய எழுதியுள்ளார் இந்நற்செய்தியாளர்.
- ♦ ஏனையவற்றை விட இந்நற்செய்தியிலேயே அதிக போதனைகள் கூறப்பட்டுள்ளன.

**II மாற்கு நற்செய்தி**

- ♦ இரண்டாவது நற்செய்தியாக இது கருதப்படுகிறது.
- ♦ பவுலுடன் 1வது பயணத்தில் இவர் சென்றிருந்தார்.
- ♦ குறைவான அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
- ♦ இந் நற்செய்தியின் சின்னம் "சிங்கம்" ஆகும்
- ♦ இயேசுவின் செயல்கள்,வழிநடத்தல்கள் மூலம் அவர் உண்மையான இறைவன் என்பது வெளிப்பட்டுள்ளது.
- ♦ புற இனக் கிறிஸ்தவர்களுக்காக இந்நற்செய்தி எழுதப்பட்டது.

**III லூக்கா நற்செய்தி**

- ♦ கிபி 75-80 காலப்பகுதியில் எழுதப்பட்டது.
- ♦ யூதர்கள் எதிர்பார்த்த மெசியா இயேசுவே என்பதை வெளிக்காட்ட எழுதப்பட்டது.
- ♦ இந் நற்செய்தியின் சின்னம் "எருது"
- ♦ இந்நற்செய்திக்குப் பல பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ♦ யூதர்களுக்கு மட்டுமல்ல இயேசு அனைவருக்கும் மீட்பர்.

**IV யோவான் நற்செய்தி**

- ♦ கி.பி.90-100 காலப்பகுதியில் இது எழுதப்பட்டது.
- ♦ "கழுகு" இந்நற்செய்தியின் சின்னமாகும்.
- ♦ இறைமகன் கிறிஸ்துவை ஏற்று விசுவாசத்தின் வழியாய் வாழ்வு பெறுவதே இந் நற்செய்தியின் நோக்கமாகும்.
- ♦ ஏனைய நற்செய்திகளில் இருந்து இது முற்றிலும் வேறுபட்டது.

**இவ்வாறு நான்கு நற்செய்திகளின் கருப்பொருளும் ஒன்றாக உள்ளது. எனினும் அவை வெளிப்படுத்தப்பட்ட முறைகள் வித்தியாசமானவையாகும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோடி

## ஞானப்பிரகாச சுவாமிகள்

**20ம்** நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய ஈழத்துப் பெரியார்களுள் தலைசிறந்த ஒருவராகத் தமிழறிந்த மக்கள் அனைவராலும் பாராட்டப்படக் கூடியவர் ஞானப் பிரகாச சுவாமிகள் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். இற்றைக்கு 50 ஆண்டுகட்கு முன்னே அவருடைய யௌவனப் பருவத்தில் கத்தோலிக்க குருமாருக்குரிய தவக் கோலத்தோடு, கம்பீரமான தோற்றம், அருள் கனிந்த பார்வை, கத்தோலிக்க மக்களிடத்துப் பரிவுகொண்ட உள்ளம், இத்தகைய நல்லமை வுடன் விளங்கிய அப்பெரியாரை எனது சிறு பிராயத்தில் நான் பல முறை கண்டதுண்டு. அந்தக் காலத்தில் நல்லூரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் அவர் வாசம் செய்துகொண்டு அதன் சூழலில் உள்ள ஏனைய கிராமங்களில் தேவாலயங்களைக் கட்டுவித்து, அவ்வக் கிராமங்களில் வாழ்ந்த மக்களுட் பலரைச் சமய மாற்றம் செய்வித்தார். பலவகையிலும் அங்ஙனம் சமய மாற்றம் பெற்ற மக்களை ஆதரித்து கத்தோலிக்க மக்களின் தொகையைப் பெருகச் செய்துவந்த வரலாற்றை நோக்கும்போது சுவாமிகளைப் போலக் கத்தோலிக்க சமயத்துக்குத் தொண்டு புரிந்து வந்த குருமார்கள் மிகச் சிலர் என்றே கூறலாம். அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஏறக்குறைய 37 கோயில்களைக் கட்டுவித்து மூவாயிரம் மக்களை மதமாற்றம் செய்தார் எனக் கூறப்படுகிறது. இத்தகையதொரு தொண்டைச் செய்யக்கூடிய ஒருவருக்கு எத்துணை ஆற்றலும் சமயப் பற்றும் தியாகநோக்கும் இருந்திருத்தல் வேண்டும் என்பதை நாம் ஊகித்தறியலாம். அவர்களுடைய சமயத்தொண்டை நினைக்கும்போது 18ம், 19ம் நூற்றாண்டுகளில் சமயப்பிரசாரம் செய்து சைவமக்களை மதமாற்றம் செய்த ஐரோப்பிய பாதிரிமார்களும் குருமார்களும் கையாண்ட வழிகள் ஞாபகத்துக்கு வருகின்றன. றொபேட் டீ நொபிலி என்ற தத்துவ போதக சுவாமிகள் தொடக்கமாக ஞானப்பிரகாச சுவாமிகள் ஈறாக மக்களிடையே மதமாற்றம் செய்வதற்கு அவர்கள் கையாண்ட முறை ஒன்றுதான். அதாவது சைவ மக்களை மதமாற்றம் செய்வதற்கு அம்மக்களுடைய மொழியை நன்கு அறிதல், அவர்கள் செய்யும் வழிபாடுகள் பற்றியும் நன்கு ஆராய்ந்தறிதல், மக்களுடைய மனநிலை, சூழல், கலாசாரம், பொருளாதார நிலை ஆகியன பற்றி நன்கு அறிந்திருத்தல். இங்ஙனம் பெற்ற அறிவின் பயனாக அம்மக்களுடைய மொழி வாயிலாக அவர்கள் வணங்கும் தெய்வங்கள் குறித்தும், அத் தெய்வங்களுக்குச் செய்து வரும் வழிபாடுகள் குறித்தும் குறைபாடுகள் கண்டு அவற்றை அவர்கள் மொழியில் நன்கு எடுத்துக்காட்டி அவர்களுடைய பேதமைப் பண்பை உணரச் செய்தல். தங்கள் சமயத்தைப் போதித்து அவர்களுக்கு ஆதரவளித்து அவர்களையும் அவர்களுடைய பிள்ளைகளையும் சமய வழியில் கல்வி பயிற்றி அவர்களுக்கு வேண்டிய பொருளுதவியைச் செய்தல். இவ்வாறு பல வழிகளைக் கையாண்டு மத மாற்றம் செய்வதில் அனுகூலம் எய்தினார்கள். இந்த வழியைத்தான் ஞானப்பிரகாச சுவாமிகளும் கையாண்டார். ஆகவேதான் தமிழை அவர் நன்கு கற்றார். சைவத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்தார். இதன் பயனாகப் பல நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றைத் தமிழில் எழுதி மக்களிடையே பரப்பினார். அங்ஙனம் அவர் எழுதியவற்றுள் சில பின்வருமாறு: இரண்டு பிரதான பொய்கள், ஒரு முக்கியமான கடமை, மோட்சப் பாதை, ஆன்மா, தெய்வக்குரு, கடவுள் மனிதர் கிறிஸ்துநாதர், சமய நியாயத்தீர்ப்பு, மனச்சாட்சி. பாதிரி மதத்தினர் முதலியன. இவையெல்லாம் 4 பக்கங்கள் முதல் 40 பக்கங்கள் வரை வரையப்பட்ட நூல்களும் பிரசுரங்களுமாகும். ஒவ்வொன்றும் கத்தோலிக்க குருவான தனியொருவருடைய ஆக்க முயற்சியே என்பதை உணரும் போது அவரை யாவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டாமல் இருத்தல் முடியாது.

மக்களிடையே மத போதனை செய்வதிலும் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் அக்காலத்தில் இருந்திலர் என்றே கூறலாம். கத்தோலிக்க குடும்பங்களின் நன்மையின் பொருட்டுக் குடும்பவாசம் என்ற ஒரு மாதாந்தப் பத்திரிகையை ஏனைய குருமார்களின் உதவியுடன் வெளியிட்டார். கத்தோலிக்க திருச்சபையின் சரித்திரம் பற்றி உரையிலும் - பாட்டிலும் பலவற்றை எழுதியுதவினார். வண.பிதா ஜெரோம் கொன்சால்வஸ், வண. பிதா கப்றியஸ் பச்சிக்கோ, வண. பிதா சீதானோ அன்ரோனியோ ஆகியோர் எழுதி வைத்த நூல்களைத் திருத்தி அச்சிட்டு உதவினார். வண. பிதா லெஸ்ரர் எழுதிய பிரான்சீய நூலில் அடங்கிய கருத்துக்களை 'ஆண்டவர் சரித்திரம்' என்னும் நூலாக வெளியிட்டார். வண.பிதா பிறப்பல் என்பவர் எழுதிய நூலை 'கிறிஸ்துநாதரின் சரித்திர ஆராய்ச்சி' என்ற நூலாக எழுதி வெளியிட்டார்.

வண.பிதா கல் என்பவர் எழுதிய ஒரு நூலை 'கத்தோலிக்க திருச்சபையும் அதன் போதனைகளும்' என்ற பெயரோடு வெளியிட்டார். அவர் கத்தோலிக்க மதத் தத்துவங்களில் மட்டு மன்றித் தமிழையும் வட மொழியையும் நன்கு கற்று இந்து மதத் தத்துவங்களிலும் புராண இதிகாசக் கதைகளிலும் வல்லுநராய்ச் சிறப்புற்று விளங்கினா ராதலின் எத்தகைய சமய வாதங்களிலும் தன் கோள் நிறுவக்கூடிய ஆற்றல் அவருக்கிருந்தது. அதனால் அவர் கத்தோலிக்க சமயத்தை வளர்ப் பதில் தனிப்பட்ட பெருமை வாய்ந்தவராய் அக் காலத்திலே விளங்கினார். அவர் சைவமதக் கொள்கைகளையும், வழிபாடுக்ளையும் படித்தறிந்து தம்முடைய சமய போதனைக்கு அவற்றைப் பயன்படுத்தினார் என்பதற்கு அவர் எழுதிய 'தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்' என்ற நூல் ஒரு சிறந்த சான்றாக விளங்குகின்றது. அந்நூலின் 61ம் பக்கத்தில் "தமிழகத்தாரின் ஆதித் தெய்வங்களுள் பேய்களே தலைமையிடத்தை வகிப்பனவாகக் காணப்படுகின்றன. காலஞ்சென்ற கனம் போப்பையர் இனிது கூறியபடி உண்மையான பழமையையுடைய தமிழ் நூல்களிலெல்லாம் ஐயை ஆகிய பேய்களே தமிழர் போற்றிய தெய்வங்களாக விளங்குகின்றன என்று கூறி யிருப்பதை நோக்கும் போது சைவ மதத்தைப் பற்றிய தம் அறிவைக் கத்தோலிக்க மதப் பிரசாரத்துக்கு எங்ஙனம் பயன்படுத்தினார் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம்.

மேலும் அவர் செய்த தமிழ்த் தொண்டைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுவோம். 19ம் நூற்றாண்டின் மத்திய காலத்தின் பின்னர் உள்ள காலந்தான் ஐரோப்பிய அறிஞர்கள் மொழி ஆராய்ச்சிகளில் ஈடுபடத் தொடங்கிய காலம். மக்ஸ் முல்லர் முதலானோர் சமஸ்கிருதம் முதலிய பண்டைய பாஷைகள் எல்லாவற்றையும் படித்து உலகில் உள்ள மொழிகள் எல்லாம் ஒரு வகுப்பைச் சேர்ந்தனவா அல்லவா என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கினார்கள். இதன் பயனாக உலக மொழிகளை நான்கு மொழிக் குடும்பங்களாக வகுத்தனர். இங்ஙனம் வகுத்த மொழிகளிற்றான் திராவிட மொழிக் குடும்பம் என்று ஒரு தனிக் குடும்பம் இருக்கக் கண்டார்கள். ஆகவே, அக் குடும்பத்தின் மொழிகளைப் பற்றி ஐரோப்பியர்களும் தமிழர்களும் ஆராயத் தொடங்கினார்கள். இத் தகைய மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்ட தமிழ றிஞர்களுள் முதலில் வைத்தெண்ணத் தகுந்தவர், ஞானப்பிரகாச சுவாமிகள் என்பதில் ஐயமில்லை. எல்லா மொழிக் குடும்பங்களுள்ளும் எது முக்கிய மொழி, அது எப்படி ஆரம்பித்தது என்ற இன்னோ ரன்ன ஆராய்ச்சிகளிலே சுவாமிகள் ஈடுபடத் தொடங்கினார்கள். இதன் பயனாக அவர் எழுதிய நூல்கள் பல; 'செந்தமிழ்' முதலிய பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் பல. அவற்றையெல்லாம் நாம் தொகுத்துப் பார்க்கும்போதுதான் சுவாமியவர்களின் தமிழ்ப்பற்று, மொழியாராச்சிவன்மை முதலிய வற்றைக் கண்டறிய முடிவதோடு இந்த ஆராய்ச் சியில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கினார் என்பதையும் அறிகின்றோம்.

இங்ஙனம் அவர் மொழி ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு அவருக்கு உறுதுணையாயிருந்தது பன்மொழியறிவு. சமஸ்கிருதம், ஆங்கிலம், பிரான்சீய மொழி, இலத்தீன், கிரேக்கம், கீபுறு ஆகிய மொழிகளிலே போதிய புலமை பெற்றிருந்தார். அவருடைய காலத்தில் மொழியாராய்ச்சிக்கு மிக்க மதிப்பும் இருந்தது. அதனால் அவருக்குத் தமிழ் இலக்கியத்திலே சிறந்த அறிவிருந்த போதிலும் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடாது மொழியாராய்ச் சியில் ஈடுபட்டாரெனலாம். அவருடைய மொழி யாராய்ச்சி அறிவை தமிழ்ச் சொற்பிறப்பாரய்ச்சி, தமிழ் அமைப்புற்ற வரலாறு அதாவது சொற்களின் உண்மைப் பிறப்பு முதலிய நூல்களிலிருந்து அறிய லாம். அந்த நூல்களிலே அவர் குறிப்பிட்டுள்ள பிற ஆராய்ச்சியாளர்களின் நூல்களின் பட்டியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நோக்கும்போது அவருக்கு மொழியாரய்ச்சி அறிவு எத்துணை பரந்ததாக இருந்தது என்பது தெரிகின்றது. இந்த இரு நூல்களையும் குறிப்பிடும் போது அவர் செந்தமிழ் 34ம் தொகுதி 193ம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

"மொழி நூல் வேறு இலக்கண நூல் வேறு. முன்னையது தனிச் சொற்களின் இயல்பையும் அவை தம்முள் அடையும் மாற்றங்களையும் கூறும். பின்னையது சொற்கள் ஒன்றோடொன்று கூடும்போது முன்னிலை இறுதி நிலைகளிற் கொள்ளும் விகாரங்களை எடுத்தோதும். தமிழில் தொல்காப்பியம் முதலாகப் பல இலக்கண நூல்கள் எழுந்துள்ளன. மொழி நூல்களோ சமீப காலத்தில் மட்டும் வெளிப்படத் தொடங்கியனவாகும். மாகறல் கார்த்திகேய முதலியார் இயற்றிய மொழிநூல் இந்த நிரையில் முதன் முதற் செய்த பிரயத்தனமாய் மேலும் பல திருத்தங்களுக்கு இடமளிப்பனவய்க் கிடக்கின்றது. எனது தமிழ் அமைப்புற்ற வரலாறு என்ற நூலும் தமிழ்ச் சொற் பிறப்பு ஆராய்ச்சி என்னும் நூலும் யதார்த்தமான மொழி நூலினுக்கு உரிய அத்திவாரங்களை யிட்டன என்று சொல்லலாம்"

இங்ஙனம் அவர் கூறியதை நோக்குமிடத்துத் தமிழிலே மொழி நூல் ஆராய்ச்சிக்கு அக்காலத்தில் இருந்த தேவை ஒருவாறு புலப்படுகின்றது.

ஞானப்பிரகாச சுவாமிகள் மதப் பிரசாரத்துக்காகவே தமிழை நன்கு கற்றனர். எனினும் தமிழ் மிகவும் அவரைக் கவர்ந்து கொண்டது. தமிழின் தொன்மையையும் அதன் சிறப்பையும் அவர் உணர்ந்து கொண்டதனால் அதன் அத்திவாரத்தைத் தோண்டி ஆராய்ச்சி செய்யத் தமிழார்வம் அவரைத் தூண்டிற்று. எனவே தமிழ் அடிகளே சுமேரியம் முதலிய பண்டைய மொழிகளுக்கும் சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீனியம், கொதிக்கம், சர்மானியம், பழைய ஆங்கிலம் முதலான இந்து ஐரோப்பிய பாஷை களுக்கும் அத்திவாரமாயின என்ற முடிபு பல அறி ஞர்கள் உவந்து ஏற்றுக்கொள்ளும்படி நிலைநாட்டப் படலாயிற்று. தமிழ்ச் சொற்களுடன் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, கோண்டி, குறுக் கூயி, பிறாகூய் ஆகிய தமிழ்ப் பாகதச் சொற்க ளையும் ஒப்புநோக்கித் தமிழ் அடிகளைக் கண்டு பிடித்து அவ்வடிகளினின்றே இந்து ஐரோப்பிய மொழிகள் கிளைத்தெழுந்தன என்ற உண்மையை எடுத்துச் சொல்லித் தமிழரின் பழைமையை நிலை நாட்டினார்.

தமிழுக்குச் செய்த தொண்டிலே ஞானப் பிரகாச சுவாமிகள் செய்த தமிழ்ச் சொற்பிறப்பா ராய்ச்சியே மிக மிகச் சிறந்ததொன்றாகும் எனக் குறிப் பிடலாம். தமிழிலே உயிரெழுத்துக்களின் தோற்றம் பற்றிய தன்னுடைய கருத்துக்களை நிலைநிறுத்தவே தமிழ்ச் சொற்பிறப்பாராய்ச்சி என்ற நூலை எழுதி வெளியிட்டார் எனலாம். சுவாமிகள் கூறிய தமிழ் உயிர் எழுத்துக்களின் ஒலித்தோற்றம் பற்றித் தற்கால மொழி நூல் ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடுண்டு. அகரமும் இகரமும் சேர்ந்து ஐகார மாகும் என்றும் அகரமும் உகரமும் சேர்ந்து ஔகார மாகியது என்பதும் தற்கால மொழிவல்லுநர்களால் ஏற்கப்பட்டதொன்று. தொல்காப்பியரும் அகர இகரம் ஐகாரம் ஆகும் என்றும் அகர உகரம் ஔகாரமாகும் என்றும் கூறியுள்ளார். ஆனால் ஞானப்பிரகாச சுவாமிகள் அகரமும் இகரமும் சேர்ந்த சேர்க்கையால் ஐகாரம் பிறந்தது என்று கூறுகின்றார். இந்த அடிப்படை வேறுபாடு மொழி நூல் அறிஞர்களால் ஏற்கப் பெறுவதில்லை. ஐகார ஒலியின் தோற்றம் பற்றி ஞானப்பிரகாச சுவாமிகள் இப்படிக் கொண்ட போதும் அறிஞர் கால்டுவெல் அவர்கள் அகர இகரத்தின் சேர்க்கையால் ஐகாரம் பிறந்தது என்று சொல்லாமல் எகார இகரத்தின் சேர்க்கையால் ஐகாரம் பிறந்தது என்கிறார். அகர இகரமும் ஐகாரமாயின என்று தொல்காப்பியர் கொண்டதே பொருத்தமுடையதாகும்.

ஞானப்பிரகாச சுவாமிகள் சொற்களின் அடித்தோற்றம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டது மட்டுமன்றிச் சொற்கள் அமைப்புற்ற வரலாற்றிலும் ஈடுபட்டார். அவ்வாறு சொற்கள் அமைப்புறும் போது அவை கட்டப்படும் கட்டுக்களாற் சொற்கள் கருத்துக்களில் வேறு படுவதைச் சுட்டிக்காட்டு கிறார். திராவிட நாகரிகத்தின் உற்பத்தியிடமான மொகஞ்சதாரோ, கரப்பா ஆகிய இடங்களில் ஆராய்ச்சியில் ஈடுபட்ட சுவாமி ஹீராஸ் அவர் களுடன் ஞானப்பிரகாச சுவாமிகள் தொர்புகொண்ட தால் மேல் நாட்டாரின் ஆரய்ச்சித் துறையிலும் பரிச்சயம் பெறத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டார். மொகஞ்சதாரோ, கரப்பா நாகரிக வளர்ச்சியைப் பெற்றிருந்த நாடுகளாக சுமேரியா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபிலோனியா என்னும் நாடுகள் விளங்கின. இவை யாவற்றிலும் ஆறு, மலை, ஊர் என்னும் பெயர்ச்சொற்கள் இடம் பெறுகின்றன. சுமேரிய நாகரிகத்திலே இடம் பெறும் பெயர்கள்தான் சிந்துவெளி நாகரிகத்திலும் இடம்பெறுகின்றன.

எனவே, ஆதிகாலத்திலே தமிழரின் பொதுவான இருப்பிடம் உலகெலாம் பரந்திருந்தது என நிலைநாட்டினார். செந்தமிழிலே அவர் எழுதிய 'பண்டைமக்களின் பொது இருப்பிடம்', 'பண்டைத் தமிழர்' என்னும் கட்டுரைகளிலே தம்முடைய கருத்துக்களை நிலை நிறுத்தியமையை தெளிவாக உணரலாம்.

ஞானப்பிரகாச சுவாமிகள் மொழியியல் ஆராய்ச்சியில் மட்டுமன்றிச் சரித்திர ஆராய்ச்சி களிலும் சிறந்து விளங்கினார். இவர் ஆங்கிலத்தி லும் தமிழிலும் சரித்திர ஆராய்ச்சி பற்றி நிறைய எழுதியுள்ளார். சிறப்பாக யாழ்ப்பாணத்தின் சமய சமூக வரலாறுகள் அவர் கவனத்தை மிகவும் கவர்ந்தன. 'போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்க ளில் யாழ்ப்பாணச் சரித்திரம்' 'தமிழரின் பூர்வ சரித்திர மும் சமயமும்', 'யாழ்ப்பாணத்து வரலாற்று ஆராய்ச்சி நூல்' என்பன அவரால் தமிழிலே எழுதப்பட்டவை. 'இலங்கையில் கத்தோலிக்க தேவாலயங்களின் சரித்திரம் 1ம் பகுதி', 'யாழ்ப்பாணத்தில் அத்தியட்ச குருவின் ஆட்சிஸ்தானத்தில் 25 வருடங்களாகக் கத்தோலிக்க இலக்கியத்தின் சரித்திரம்' என்பன அவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவையாகும்.

ஞானப்பிரகாச சுவாமிகளின் சிந்தனை பண்டைய நாகரிகத்தை ஆராய்வதிலும் அதன் சிறப்பைப் பிறருக்கு எடுத்துக்காட்டுவதிலும் பிற்காலத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டது. பண்டைத் தமிழர்களுடைய கொள்கைகளுக்கும் ஆரியரது கொள்கைகளுக்கும் வேறுபாடுகள் பல தொடக்கத்தில் இருந்தன. உதாரணமாக ஆரியர் இறந்த பின் சுவர்க்கப் பேறடைதலையே உயர் நிலையாகக் கொண்டிருந்தனர். பண்டைத் தமிழரோ வெனின் இறப்பின் பின்னரும் பிறப்பு உண்டு என்றும் பிற பிறப்புகளினின்றும் விடுதலை பெறுவதே உயர் நிலை என்றும் கருதியிருக்கின்றனர். சுவர்க்கப் பேறடைவதற்கு ஆரியர் வேள்விகளைச் செய்தனர். தமிழர் பிறவா நிலையை அடைவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைப் படிமுறை யால் அனுட்டித்தனர். பிற்காலத்தில் வேறுபாடு நீங்கி பண்டை மக்களிலிருந்து தமிழரது கொள்கை கள், வாழ்க்கை முறைகள் ஆகியன ஆரியர்களால் விரும்பி ஏற்கப்படலாயின. இவ்வாறே ஆரியர் முதலான பிற இன மக்களிலிருந்து அன்றாட வாழ்வு முதல் அரசியல் வாழ்வு வரை எல்லா நிலைகளிலும் பண்டைத் தமிழர் வேறுபட்டவராய் மிக்க சிறப்புடையதொரு நாகரிக வாழ்க்கை நடத் தினர் என்பதைப் பல்வேறு ஆதாரங்கள் மூலம் செந்தமிழ் 43ம், 45ம் தொகுதிகளில் விரிவாக விளக்கி யுள்ளார்.

சுவாமிகளுடைய வாழ்க்கை தொடக்கத் தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதிலும் பலருமறியச் செய்வதிலும் ஈடுபட்டிருந்தது. அதன் பின்னர் அவருடைய வாழ்க்கை மொழியாராய்ச் சியில் ஈடுபட்டதன் பயனாகத் தமிழின் தொன் மையை எடுத்துக்காட்டுவதிலே செலவிடப்பட்டது. அவருடைய இறுதிக்காலம் தமிழ் மக்களது நாகரீகத்தின் தனிச் சிறப்பை நிலைநாட்டுவதற்கு வேண்டிய ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுவதாயி ருந்தது. பண்டைத் தமிழரின் நாகரீக வாழ்விலும் சமய வாழ்விலும் நெருங்கிய ஈடுபாடுடையதாக விளங்கிற்று. இங்ஙனம் தமிழிலே சொற்பிறப்பகராதி ஒன்றை அமைத்தல் வேண்டும் என்று உள்ளம் கூர்ந்து முயற்சி செய்து வந்ததின் பயனாக அவ்வகராதியின் ஐந்து பகுதிகள் வெளியிடப் பட்டன. அவ்வாக்க முயற்சியை அவர் தொடர்ந்து செய்து முடிக்கும் பேறு அவருக்குக் கிடையாது போயிற்று. அவ்வேலையைத் தொடர்ந்து வணக்கத் துக்குரிய பிதா டேவிற் அவர்கள் செய்து வருகிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியுறு கின்றோம். இந்த ஆக்கவேலை பூரணமாகச் செய்து முடிக்கப்படுமாயின் கத்தோலிக்க மக்களாற் தமிழுக்குச் செய்யப்பட்ட பெருந்தொண்டு இது என்று தமிழ் உலகத்தாரால் என்றென்றும் பாராட்டப் படும் பெருமையுடைதாகும்.

**பேரா. வீ. செல்வநாயகம்**
**கட்டுரைகள்,**
குமரன் பதிப்பகம் 2004
*(உ.01.68இல் இலங்கை வானொலியில்*
*ஒலிபரப்பப்பட்டது)*
நன்றி – 'ஓலை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






"தொண்டனின் சில நிமிடங்கள்" பகுதிக்காக இம்முறை பிரபல சமய ஆர்வலர் திருவாளர் ஏரம்பமூர்த்தி பாக்கிய மூர்த்தி அவர்களைச் சந்தித்தோம். மட்டக்களப்பு கோட்டைமுனையைச்சேர்ந்த திரு.ஏ.பாக்கியமூர்த்தி அவர்கள் பிரபல்யமான சமயப்பிரசங்கி. சைவசமய சித்தாந்தங்களில் மிகவும் ஈடுபாடு மிக்கவர். இதன்காரணமாக 'சைவ சித்தாந்த சிரோன்மணி' என்னும் பட்டம் பெற்றவர். ஓய்வு பெற்ற அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான்கள் அமைப்பினால் வழங்கப்படும் 'ஜனசேவா' என்ற கீர்த்திமிகு விருதினைப் பெற்றவர். இவரை ஓர் இனிமையான மாலைப்பொழுதினில் செவ்விகண்டோம். சற்றுத்தொலைவில் 'எறிகணை'களின் சத்தம் கேட்டுக்கொண்டிருக்க பேட்டியினை ஆரம்பித்தோம்.

**உங்களைப்பற்றிச் சிறிது சொல்லுங்களேன்:**

எனது தகப்பனார் பெயர் கனகசபை ஏரம்பமூர்த்தி. அவர் பாடசாலை அதிபராகப் பணி புரிந்தவர். அத்துடன் நொத்தாரிசாகவும் கடமை புரிந்தவர். நான் 1937ம் ஆண்டு ஏப்ரில் 3ம் திகதி கோட்டை முனையில் பிறந்தேன். ஆரம்பக்கல்வியை அரசடி வித்தியாலயம், கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம் (இப்போது அரசடியில் உள்ள டிஸ்கோ ஹோட்டல் பின் புறமாக கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் இருந்தது) என்பன வற்றில் பெற்றுக் கொண்டேன். பின்னர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் (தற்போது இந்துக் கல்லூரி) உயர்கல்வியைப் பெற்றுக்கொண்டேன்.

தொடர்ந்து மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் வர்த்தகத்துறையில் உயர்கல்விச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டேன்.

எனக்கு இரண்டு மகன்மாரும், ஒரு மகளும் இருக்கின்றார்கள். மனைவியார் அண்மையில் காலமாகி விட்டார்.

**உங்கள் கல்விப்பணிபற்றிக் கூறுங்களேன்!**

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறையில் பயிற்றப்பட்டேன். பயிற்ச்சியைத் தொடர்ந்து பேருவளை சீனன்கோட்டை முஸ்லிம் வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்றுக் கொண்டேன். தொடர்ந்து பசறை, பதுளை சரஸ்வதி வித்தியாலயம், ஸ்பிரிங்வெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பனவற்றில் கற்பித்துவிட்டு கோட்டைமுனை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தேன்.

தொடர்ந்து படிப்பு விடுமுறையில் பலாலி ஆசிரியர் பயிற்ச்சிக்கல்லூரியில் வர்த்தகப்பாடத்தில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டேன். வர்த்தகத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக காத்தான்குடி ம.ம.வி. யில் இணைந்து கொண்டேன். அதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு சிவானந்தாவில் இடம்மாற்றம் பெற்றுவந்தேன். அங்கு க.பொ.த. உயர்வகுப்பில் வர்த்தகத்துறையை உண்டாக்கினேன்.

அக்காலகட்டத்தில் இடம்பெற்ற அதிபர்கட்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்ததன் பயனாக ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம், புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி என்பனவற்றில் கடமையாற்றி ஓய்வு பெற்றேன்.

**நீங்கள் சமயப்பணியில் அதிக ஈடுபாடு கொண்டவர் என்று அறிகின்றோம். அதுபற்றி வாசகர்கட்கு எடுத்துச் சொல்ல இயலுமா?**

உண்மைதான், எனக்கு சமயத்துறையில் சற்று ஈடுபாடு உண்டுதான். அது தொடர்பான நூல்களைக் கற்றுள்ளேன், கற்றும் வருகின்றேன். கோட்டைமுனை மகாமாரியம்மன் ஆலய நிர்வாகத்தில் உறுப்பினராக உள்ளேன். அதில் செயலாளராக இருந்தபோது 1979ல் கும்பாபிஷேகம் செய்தேன். அதேபோன்று 1993ல் தலைவராக இருந்தபோது அக்கோவிலுக்கு மீண்டுமொரு முறை கும்பாபிஷேகம் செய்வித்தேன்.

அத்துடன் சமயப்பிரசங்கம் செய்யும்படியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிடுவார்கள். இராமகிருஷ்ணமிஷன், இந்து இளைஞர் மன்றம் என்பனவற்றுக்கு அடிக்கடி சென்று உரையாற்று வேன். ஏராளமான மக்கள் கூட்டத்தின்முன் உரையாற்று வதைப் பெரும்பாலும் தவிர்த்துவிடுவேன். ஏனெனில் அவர்களில் சிலர் எப்படியும் உரையைக் கவனிக்காது மற்றவர்களையும் தொந்தரவு செய்வார்கள். எனினும் படுவான்கரையில் ஒருகோயில் திருவிழாவில் கலந்து கொள்ளச் சென்றிருந்தேன். ஏராளமான மக்கள் கூட்டம், அப்படியே அசையாது செவிமடுத்தார்கள். சந்தோசமாக இருந்தது.

**நீங்கள் இந்தியாவிற்கு திருத்தலயாத்தி ரைகள் சென்றுள்ளதாகக் கேள்விப்பட்டோம். அதுபற்றி...?**

கடவுளின் அருளால் தமிழ்நாட்டின் அனேக ஆலயங்கட்கு யாத்திரை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. மிகவும் இனிமையான அனுபவங்கள் அவை.

திருக்கடையூர் - அபிராமி அம்மாள் சமேத துமிந்தகடேஸ்வரர் என்ற கோயில் என்னை மிகவும் கவர்ந்தது. மிகவும் பரிசுத்தமாக அக்கோவில் காணப் பட்டது.

இதேபோன்று மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலும் என்னை மிகவும் கவர்ந்தது. அத்துடன் அண்ணாமலையில் ரமணாச்சிரமும் சிறப்பானது.

**உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு மனத் திருப்தி தந்தது என்ன?**

என்னிடம் படித்த மாணவர்கள் மிகவும் நல்ல நிலையில், தரமான உத்தியோகங்களில் உள்ளார்கள். நான் என் தொழிலைப் பணம் சம்பாதிக்கும் ஒன்றாகக் கருதவில்லை. சமய ஈடுபாடும் எனக்கு ஆத்மதிருப்தி யைத்தந்தது. ஏனெனில் சமயம்சாரா வாழ்க்கை முழுமையானது அல்ல.

**சங்கடமான கேள்வியொன்று! நீங்கள் உங்கள் சமய உரைகளிலோ அல்லது நடவ டிக்கைகளிலோ பிறமதங்களைத் தாக்குவ துண்டா? ஏனெனில் சிலர் அவ்வாறு செய்வதுண்டு.**

நான் ராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதாதேவி அம்மையார், சுவாமி விவோகானந்தர் ஆகியோரின் போதனைகளைப் பின்பற்றுபவன். எனவே என்னால் பிற மதங்களைத் தாக்கிப் பேசமுடியாது. அத்துடன் ஒவ்வொரு மதங்களும் உயரிய கருத்துக்களையே கூறுகின்றன. குறிப்பாக இயேசுவின் ஒவ்வொரு வார்த்தைகளும் அமிர்தம்.

**கிறிஸ்தவ சமயத்துடன் எவ்விடத்தில் நீங்கள் முரண்படுகின்றீர்கள்?**

நான் முரண்படுவதில்லை, எனினும் பாவத்தில் இருந்து விடுதலை, பில்லி சூனியம் கட்டுக்களில் இருந்து விடுதலை, எனவே வாருங்கள் என்று அறிவித்தபடி திரிகின்றார்களே! அதுதான் எனக்கு உடன்பாடில்லை.

**பொதுவாக, வன்செயல்கள் மற்றும் உரிமை மறுப்புகள் போன்ற விடயங்கள் நடக்கும்போது கத்தோலிக்க ஆயர்கள், மதகுருக்கள் கண்டனம் செய்வதோடு செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றார் கள், அவர்களில் சிலர் அதற்காகக் கொல்லப் பட்டும் காணமற்போயும் உள்ளார்கள். ஆனால் சைவசமயம் சார்பாக அவ்வாறு குரல் கொடுப்பார் மிகவும் அரிதாகவே உள்ளனர். ஏன்?**

(தலையால் பலமாக ஆமோதித்தவாறு) உண்மை தான். இந்துமதம் சார்பாகக் கதைக்க சரியான அமைப்பு கள் இல்லை. இராமகிருஷ்ண மிஷன் மட்டும்தான் உண்டு.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை! அடிப்படை யான ஆன்மீகக் கொள்கையின்படி இயங்காத எந்த நாடும் அழியும்.

நாகரீகத்தில் உச்சத்தில் இருந்த சாம்ராஜ் யங்கள் கூட இன்று சாம்பராகத்தான் காணப்படுகின்றன.

**உங்கள் எதிர்கால அபிலாஷை என்ன?**

இந்தநாட்டில் சமாதனம் மலரவேண்டும். இதையே நான் ஆவலோடு எதிர்பார்க்கின்றேன்.

*ஈற்றில் தொண்டன் சார்பில் பாக்கியமூர்த்தி ஐயாவிற்கு நன்றி கூறி விடை பெறும் போது நன்கு இருட்டி விட்டது. அப்போது புளியந்தீவில் இருந்து வவுணதீவுப் பக்கமாக, பயங்கரச்சத்தத்தோடு விசுக்கென்று எறிகணை யொன்று செல்லும் ஓசைகேட்டது.*

-ஆழியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி நிஹால்ஜிம்பிரவுன் அடிகள் எங்கே?

கடந்த 30 வருடகால வரலாற்றிலே வடகிழக்கில் காணாமற் போனவர்களின் விபரக்கோவை நீண்டு கொண்டே போகின்றது. இந்த விபரப்பட்டியலில் கத்தோலிக்க குருக்களின் எண்ணிக்கை விபரங்களும் உள்ளடங்கியே உள்ளன. யாழ்ப்பாணம் அல்லப்பிட்டி பங்குத் தளத்திலே பணிபுரிந்த அருட்பணி திருச்செல்வம் நிஹால் ஜிம்பிரவுன் என்பவரும் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டு விடுவாரோ என்பதுதான் எல்லோரது வியப்பின் விளிம்புக்கேள்வியாக உள்ளது.



- அருட்பணி மேரிபஸ்டியான் வங்காலை மன்னாரிலும்,
- அருட்பணி செல்வராஜா சொறிக்கல்முனை மட்டக்களப்பிலும்,
- அருட்பணி இயூஜின்ஹேபர்ட் (சே.ச) ஏறாவூர் மட்டக்களப்பிலும்

இது வரையில் காணாமற் போயிருந்தார்கள். இருந்தாலும் இவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பது ஏதோ ஒரு வகையில் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட விடயமாக இருக்கிறது. இதே கதி அருட்பணி ஜிம்பிரவுனின் விடயத்திலும் நடந்து விடுமோ என்பது எம் அனைவருடையவும் ஏக்கமும் அங்கலாய்ப்பும். இருப்பினும் "உறங்காத உண்மை" ஒரு நாள் வெளிவரும். அந்த நாளுக்காய்க் காத்திருக்க வேண்டியுள்ளது.

1972ம் ஆண்டு பிறந்த ஜிம்பிரவுன் அடிகள் தனது குருத்துவக் கல்வியை யாழ்ப்பாணம் புனித/சவேரியார் பெரிய குருமடத்தில் முடித்ததன் பின் 2004ம் ஆண்டு யாழ் ஆயர் தோமஸ் சவுந்திர நாயகம் அடிகளாரால் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் புதிய இளம் குருவாக முதன் முதலில் மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிந்தார். ஆயரின் பணிப்புரைக்குப் பணிந்து ஒரு வருடகாலம் மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிந்த பிற்பாடு தனது சொந்த மறைமாவட்டமாகிய யாழ்ப்பாணத்திற்கு வந்ததும் அல்லைப்பிட்டி என்னும் பங்குத் தளத்திற்கு பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார்.

அல்லைப்பிட்டி என்னும் இடமானது யாழ்ப்பாணத்தின் பிரதான தீவாகும். இந்தத் தீவானது ஏற்கனவே குறிவைக்கப்பட்டு இரவோடு இரவாக சூட்டுச் சம்பவங்கள் மற்றும் கொலைகள் இடம்பெற்ற இடமாகும். அண்மையில் அல்லைப்பிட்டி பிலிப்நேரி ஆலயத்தைச் சுற்றி நடைபெற்ற வான்தாக்குதலில் அப்பகுதிமக்கள் 800பேர் காயமடைந்து நிர்க்கதியானபோது அவர்களைப் பல எதிர்ப்புக்கும், எச்சரிக்கைகளுக்கும் மத்தியில், அப்பகுதியிலுள்ள புனித மரியாள் ஆலயத்தில் கொண்டு போய்ச் சேர்த்து இருப்பிடமும் செய்து கொடுத்தார் அருட்பணி ஜிம்பிரவுன் அடிகள். இவ்விடயமே இவர் மேல் குறிவைக்கக் காரணமாய் அமைந்தது எனலாம். ஏனெனில் தனது கண்களால் கண்ட காட்சிகளை வெளி உலகிற்குக் கொண்டு செல்லக்கூடிய முக்கியமான ஒருவராகவும் கத்தோலிக்க குருவாகவுமிருந்தார். ஏனெனில் அங்கு நடைபெற்ற விடயங்கள் யாவும் உண்மைக்குப் புறம்பாக திரித்தே உலகிற்குக் கூறப்பட்டு வந்தது.

குருமட மாணவனாக இருந்த காலப் பகுதியிலேயே ஜிம்பிரவுன் அடிகள் துடிப்பாற்றல் மிக்கவராகவும் சமூக சேவையில் அதிகம் ஆர்வம் மிக்கவராகவும் இருந்திருக்கிறார். குறிப்பாக குரு மடத்தில் இருக்கின்ற சமூகசேவைக் கழத்தில் அதிக ஈடுபாடு உள்ளவராக இருந்திருக்கின்றார். ஏழைகளைத் தரிசிப்பது, அவர்களுக்கு முடிந்த அளவு கொடுப்பது, நோய்வாய்ப்பட்ட ஏழைகளுக்கு இரத்தம் வழங்குவது, வறுமைக்கோட்டில் வாழ்பவர்களின் தரத்தை உயர்த்தப் பல முன்னேற்ற கரமான விடயங்களை ஒழுங்கு செய்வது போன்றவற்றில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். அல்லைப் பிட்டியிலும் தனது உயிரைப் பணயம் வைத்து அந்த மக்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்துள்ளார்.

இவ்வாறு மக்கள் சேவையே மகேசன் சேவை என்று வாழ்ந்த அவர் அந்த ஒகஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் 20ம் திகதி மதியம் 12.30 மணியளவில் தனது உதவியாளர் வென்செஸ்லோஸ் விமலதாஸ் என்பவருடன் திருப்பலி ஒப்புக் கொடுக்க மண்டை தீவுக்குச் சிவப்பு நிற மோட்டார் சைக்கிளில் சென்றார். ஆனால் திருப்பலி ஒப்புக்கொடுக்க அவர் அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் மண்டை தீவிலிருந்து வரும் வேளையில் அருட்பணி பீற்றர் துரைரெட்ணம் அடிகளாரைச் சந்தித்திருக்கின்றார்கள். அதன்பிறகு அருட்பணி ஜிம் பிரவுன் அடிகளும் அவரது துணையாளரும் அல்லைப்பிட்டி பரிசோதனைச் சாவடியில் (Cheekpoint) தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். இந்த இடத்திலேயே இவர்களைக் கடைசியாக கண்டுள்ளனர்.

அரச துருப்புக்களின் கட்டுப்பாட்டிலும் உன்னிப்பான கண்காணிப்பிலும் உள்ள இடத்திலிருந்து ஒரு கத்தோலிக்க குருவானவர் அவரது வெள்ளை அங்கியில் இருந்தவேளையில் அதுவும் அவரது உதவியாளர் சகிதம் சென்று கொண்டிருந்தபோது காணாமற்போயுள்ளார் என்றால் இதன் மர்மம் என்ன? பொறுப்புள்ள அரசாங்கமாக இருந்தால் அருட்பணி திருச்செல்வம் நிஹால் ஜிம்பிரவுன் அடிகளாருக்கும் அவரது உதவியாளருக்கும் என்ன நடந்ததென்பதை உண்மையாக ஆதாரபூர்வமுள்ள வகையில் தெரியப்படுத்த வேண்டும்.

-அருள்தந்தை. றொஹான் பேர்னாட்

## ஒரு கதவு மூடும் போது ....



நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் இருண்ட நாட்கள் உண்டு. ஒவ்வொரு இருண்ட நாளும் கழியத்தான் போகிறது. அழுத்தமான சோகங்களை நம்மீது திணிக்கின்ற வாழ்க்கை, மென்மையான அன்பினால் அந்த சோகத்தையும் துடைக்கவே செய்கிறது. இருண்ட நாள் கழிந்து புதிய நாள் உதயமாகிறது. உலகத்தில் எதுவுமே எப்போதும் நீடிப்பதில்லை. தொல்லைகள் கூட நாமாகப் புதுப்பிக்காவிட்டால் சிறிது காலமே இருந்து மறைந்து விடுகிறது. துயரம், சோகம், பயம், கஷ்டம் போன்றவற்றை அவை விலக் கூடியவை என்ற உணர்வில் நீங்கள் தாராளமாக எதிர்நோக்கலாம். தவிர்க்க முடியாத ஒன்று எதிர்ப்படும் போது அதை அப்படியே ஏற்கச் சித்தமாக இருங்கள். ஏனெனில் நீங்கள் அது குறித்து செய்வதற்கு எதுவும் இல்லை. ஆகவே, அதையே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்காதீர்கள். மூழ்கும் கப்பலின் மேல் தளத்தைக் கழுவி சுத்தப்படுத்திக் கொண்டிருப்பது வீண் வேலை. அது மூழ்கத்தான் வேண்டுமென்றால் மூழ்கத்தான் போகிறது. நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் மூழ்கும் கப்பலை விட்டுவிட்டு அடுத்த பயணக் கப்பலைத் தேடுவதுதான்.

எதிர்காலத்தின் கதவுகள் உங்களுக்காகத் திறந்திருக்கின்றன. ஏற்கனவே மூடிவிட்ட கடந்த காலக் கதவைப் பார்த்தபடியே தயங்கிக் கொண்டிருக்காதீர்கள். ஒரு கதவு மூடும்போது இன்னொரு கதவு திறக்கிறது என்பது வாழ்வின் நியதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உளநலம் (MENTAL HEALTH)

உடல்நலம், உளநலம் இரண்டும் ஒரு மனிதனின் இரண்டு கண்கள் போன்றது. அதாவது கண்கள் மனிதனுக்கு உலகை உணருவதற்கும் நாளாந்த கருமங்களை ஆற்றுவதற்கும் எவ்வளவு உறுதுணையாக உள்ளதோ அதேபோல் மனித வாழ்வு மகிழ்ச்சியாக இருப்பதற்கு உடல், உள ஆரோக்கியம் இன்றியமையாததாக அமைகின்றது.

இலங்கைத்தீவில் கடந்த இரண்டு தசாப் தங்களாக இடம்பெறுகின்ற இனப்பிரச்சனையும் ஆயூதவன்முறையும் (man made disasters) அவ்வப்போது இடம்பெறுகின்ற இயற்கை அனர்த்தங் களும் (natural disasters) பெரும்பலான உயிர்களைக் காவு கொண்டதுடன் மட்டும் நின்றுவிடாது இடப்பெயர்வு, சொத்தழிவு, அகதிவாழ்க்கை, பொருளாதாரக் கஷ்டங்கள், கலாசாரச் சீரழிவுகள், விதவைகள், அநாதைகள், எதிரிகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர்களைப் படைகளில் சேர்த்தல், பால்வன்முறைகள், களவுகள், விலைமாதர்கள், மது, போதைவஸ்து பாவனை, ஆட்கடத்தல், கைதுசெய்தல், காணமல்போதல் என்று ஒரு விபரிக்கமுடியாத மனித அவலங்களுக்குரிய பட்டியல் நீண்டே செல்கின்றது. கண்ணீரும் கவலையும், வேதனையும் மனிதவாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்டது. இவ்வாறான தாக்கங்களினால் ஏற்பட்ட உளவடுவோடு ஒட்டுமொத்தமான தமிழ்ச் சமுதாயமே உள்ளதாக உணரப் படுகின்றது. அத்தோடு பிறப்புரிமை, பரம்பரை, வேறு காரணிகளின் தாக்கத்தி னாலும் இன்று இலங்கையில் உளநலனால் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவ சிகிச்சையைப் பெறுவது மிகவும் வேதனைக்குரியது.

கடந்த 5 வருடங்களாக வடக்கு, கிழக்கு மாகணங்களில் பல்வேறு மாவட்டங்களில் உள, நல மருத்துவராகக்கடமையாற்றியுள்ளேன். இவ்வனுபவத்தில் நான்கண்ட உண்மை, எதிர்காலத்தில் இலங்கையில் இத் தேவை மிகஅதிகமாக, அவசரமாகத் தேவைப்படுகின்றது என்பதுதான்.

பொதுவாக ஒரு சமுதாயத்தில் உள சமூகப் பிரச்சனைகள் பரவலாகக் காணப்படும். ஒவ்வொரு சமூகத்திலும் கிட்டத்தட்ட 10% மக்கள் உளரீதியாக, அதாவது மருத்துவ சிகிச்சை எடுக்க வேண்டிய வகையில் பாதிக்கப்பட்டிருப்பார்கள். இப்பாதிப்புகளில் பெரும்பா லான (90%) உளப்பிரச்சனைகள் மிதமானவை. இவற்றை மிதமான உளநோய்கள் அல்லது உணர்ச்சிக் கோளாறுகள் (neurosis) என்று அழைக்கலாம். இவை உருவாவதற்கு நான் மேலே கூறிய காரணங்களும் பலதரப்பட்ட நாளாந்த வாழ்க்கை அழுத்தங்களும் (stress) காரணமாக அமைகின்றன. பொதுவாக எந்தவொரு மனிதனும் தனது வாழ்க்கைக் காலத்தில் எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஏதாவது ஓர் உளக்குறைவால் பாதிக்கப்பட்டிருப்பான்; இது பொதுவானது.

உளசமூகப் பிரச்சனைகள், அவற்றின் விளைவுகள் மிகச் சாதரணமானவை. அதுவும் இலங்கைத்தீவில் உள்ள மூவின சமூகத்திற்கும் இது பொதுவானது. இதில் முதல் இடம் தமிழ்ச் சமூகத்திற் குரியது. இவ்வுலக சமூக விளைவுகள் நித்திரைக் குழப்பம், இயலாமை, தலைவலி, உடல்வலி, அசதி போன்ற மெய்பாட்டு முறையீடு, செயற் பாட்டுத்திறன் குன்றுதல், உறவுகளில் சிக்கல்கள், பாலியல் கஷ்டங்கள், மது பாவனை, தற்கொலை போன்று பல்வேறு வடிவங்களாகப் பிரதிபலிக்கலாம். இவற்றை விட இலங்கையில் முடிவேயில்லாமல் இடையிடையே விழுந்த காற்புள்ளி, அரைப்புள்ளிகளோடு தொடர்கின்ற யுத்தமும் அவற்றுக்கு மகுடம் வைத்தாற் போல் அமைந்த சுனாமிப் பேரலையும், அனர்த்தங்களும் இவ்வாறான உளசமூகப் பிரச்சனைகளையும் அவற்றின் விளைவுகளையும் அதிகரிக்கச் செய்துள்ளன.

எனவே இங்கு ஒருவருடைய உளஆரோக்கி யத்தை அவரோ அல்லது மற்றவர்களோ உணர்வது, மிக முக்கியமானது. இன்று எமது சமூகத்தில் இருக்கின்ற எதிர்மாறான கண்ணோட்டமும், (Negative view) சமூகவழுவும் (stigma) இவ்வாறான நோயாளர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்குப் பெரும் தடைக்கற்களாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெரும் சவால்களுக்கு மத்தியில் இத்துறை இன்று பலதடைகளைத் தாண்டி, தனது சேவையை நன்றே செய்துவருகின்றது. உளநலத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளிக்கு வெறுமேன மருத்துவசிகிச்சைகள் (Medical treatment) மட்டும் உதவுவதில்லை. இத்துறையோடு சேர்த்து உளவளஆலோசனை, (Councelling) சாந்தவழிமுறைகள் (Relaxation Therapy) தொழில் வழி சிகிச்சை (Occupational therapy), புனர்வாழ்வளித்தல் (Rehabilitation) உளசமூக ஆதார(Psycho social support), நடத்தை சிகிச்சைகள் (Behavioral therapy) போன்ற பல்வேறு அணுகு முறைகள் பயன்படுத்தப் படுகின்றன.

நாட்பட்ட உளநோயளர்களுக்கு (Psychosis) பொதுவாக அவர்களது வாழ்க்கைக் காலம் முழுவதும் மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படலாம். ஆனால் மிதமான உளநலக்குறைவுகளால் (Neurosis) பாதிக்கப் பட்டவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு மருத்துவ சிகிச்சைகளும் பின்னர் அத்தோடு இணைந்தாக மற்றைய அணுகுமுறைகளும் தேவைப்படலாம். எவ்வாறாயினும் இவ்வாறான ஒரு தேவையை உளநலவைத்திய நிபுணர்கள் (Psychatrist), உளநலமருத்துவர்கள் (Medical officers for mental zemith) தீர்மானிப்பதே மிகப்பொருத்தமானது, அவர்களுடன் ஏனையோர்கள் இணைந்து பணியாற்றுவது சிறப்பானது. அண்மைக் காலமாக அதாவது சுனாமிப் பேரலைக்குப் பின்னர் உள்ளூர், வெளியூர் தொண்டு நிறுவனங்களும் அதில் பணியாற்றும் சிலரும் தனியாக உளநலசேவை களை வழங்கியதனால் பெரும்பாலான பாதிக்கப்பட்ட மக்கள் தற்கொலை முயற்சிவரை சென்றதை நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இவை கிழக்கில் குறைவாக இருந்தாலும் இப் பாரிய இடைவெளி வடக்கில் இடம்பெற்றது. எனவே இங்கு சேர்ந்து குழுக்களாகப் (Team) பணியாற்றுவது மிகச்சிறப்பானது.

தொண்டன் சஞ்சிகையினூடாக இனி மலரும், மலர்களில் மக்கள் பொதுவாக அனுபவிக்கின்ற உள நலப்பிரச்சனைகளை எழுதலாம் என்று நினைக்கின்றேன். ஏனெனில் இலங்கையில் வெளிவருகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றில் பொதுவான மருத்துவ பிரச்சனைகளை மருத்துவர்கள் எழுதுகிறார்கள். மக்களின் சந்தேகங்களுக்குப் பதிலளிக்கிறார்கள். ஆனால் உளநல தேவைகள் சம்மந்தமாக வெளிவரும் ஆக்கங்கள் மிகக்குறைவாகக் காணப்படுகின்றன. இத்துறையில் பணியாற்றுகின்ற எனக்கு இத்துறை சம்மந்தமாகக் கேட்கப்படும் போது அதற்கு விளக்களிப்பது இலகுவாக அமையும் என நினைக்கிறேன்.

## உளநலம் தொடர்பான சில தகவல்கள் **(mental health issues)**

I. உலகத்தில் உளநலத்தால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்கள் ஏறத்தாழ 450மில்லியன். தற்போது உலகத்தில் இந்நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்கள் நாலாவது இடத்தில் உள்ளார்கள்.

II. இது 2020 ஆண்டளவில் முதலிடத்தை அடையும் என உலக சுகாதார ஸ்தாபனம்(W.H.O) எச்சரித்துள்ளது.

III. 16ல் ஒருவர் என்ற விகிதாசாரத்தில் உலகில் உள்ள மக்கள் தமது வாழ்க்கைக் காலத்தில் எப்போதாவது ஒரு கட்டத்தில் ஏதாவது ஓர் உளநலக்குறைவால் பாதிக்கப் பட்டிருப்பார்கள்.

IV. .இலங்கையில் உளப்பிளவை Schizopherenia என்ற உளநோயால் நூறில் ஒருவர் எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பாதிக்கப் படுவதற்குரிய சூழ்நிலை உள்ளது.

V. மனச்சோர்வு (Depression) அச்ச நோய் (Anxiety disorders) என்பன இலங்கையில் மிகப் பொதுவானவை.

VI. உலக சனத்தொகையில் 6% மக்கள் உளச்சோர்விற்கு சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

VII. 15-20% மக்கள் எதாவது ஓர் அச்சநோய்க்குத் தமது வாழ்க்கைக் காலத்தில் உட்பட்டிருப்பார்கள்.

VIII. ஏறத்தாழ 873,000 மக்கள் வருடாந்தம் தற்கொலையில் மரணமாகிறார்கள்.

IX. இலங்கையில் 25-49க்கு இடைப்பட்ட வயதினர் இறப்பதற்குக் காரணமான தற்கொலை இரண்டாம் இடத்தில் உள்ளது. 15-24 வயதிற்கு இடைப்பட்டவர்கள் மூன்றாவதாக உள்ளனர்.

X. இலங்கையில் 2000 ஆண்டில் தற்கொலை செய்து கொண்டோர் விகிதம் 100,000:31 ஆகும். உலகில் அப்போது இலங்கைக்கு இரண்டாவது இடம், முதல் இடத்தில் ரஷ்யா இருந்தது. 2003 இல் இது 91 ஆக அதிகரிக்க இலங்கை முதல் இடத்தைத் தட்டிச் சென்றது.

-June-2006 உளநலமஞ்சரி

வைத்தியகலாநிதி,
பா. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்

முடிவுத்திகதி
30 - 10 - 2006




# விவிலியம் கற்போம் - 50A

(விடுதலைப் பயணம் 32: 1–14)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே மலையினின்று இறங்கிவரத் தாமதித்ததைக் கண்ட மக்கள் ஆரோனைச் சுற்றிக் கூடி அவரை நோக்கி "................................ நாட்டினின்று எங்களை நடத்தி வந்த மோசேக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. நீர் முன்வந்து எங்களை வழி நடத்தும் ............................. எங்களுக்கு உருவாக்கிக்கொடும் "என்றனர். ஆரோன் அவர்களை நோக்கி," உங்கள் மனைவியர், புதல்வர் புதல்வியரின் ............................. கழற்றி, அவற்றை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றார். அவ்வாறே அவற்றைக் கொண்டுவர, அவரும் அவற்றைப் பெற்று ....................... வார்ப்பு அச்சில் வடிவம் கொடுத்து ஒரு வார்ப்புக் கன்றுக் குட்டியைச் செய்தார். அப்போது அவர்கள், "............................. உன்னை எகிப்து நாட்டினின்று நடத்திவந்த உன் தெய்வங்கள் இவையே" என்றனர். ஆரோன் அதற்கு எதிரே ஒரு பலிபீடம் கட்டி, "நாளைய தினம் ஆண்டவரின் விழா" என்று அறிவித்தார். மறுநாள் அவர்கள் எழுந்து ............................. செலுத்தினர். உண்டு குடித்தனர்; ஆடினர். அப்போது ஆண்டவர் மோசேயை நோக்கி, "இங்கிருந்து இறங்கிப்போ. நீ எகிப்திலிருந்து நடத்திவந்த உன் ............................. தங்களுக்குக் கேடு வருவித்துக் கொண்டனர். நான் கட்டளையிட்ட நெறியிலிருந்து இதற்குள்ளாகவே விலகி அவர்கள் தங்களுக்கென ஒரு கன்றுக்குட்டியை வார்த்துக் கொண்டார்கள். வணங்காக் கழுத்துள்ள மக்கள் அவர்கள். நான் அவர்களை ......................... போகிறேன். உன்னையோ பேரினமாக்குவேன்" என்றார். அப்போது மோசே தம் கடவுளாகிய ஆண்டவர் முன் மன்றாடி "ஆண்டவரே, நீர்தாமே எகிப்திலிருந்து கொண்டு வந்த மக்கள் மேல் கோபம் ஏன்? உமது ............................ எண்ணத்தை மாற்றிக்கொள்ளும். உம் அடியாராகிய ஆபிரகாமையும், ஈசாக்கையும், இஸ்ராயேலையும் நினைத்தருளும். நான் உன் வழிமரபினரை விண்மீன்கள் போல் பெருகச்செய்வேன்; நான் ............................ இந்நாடு முழுவதையும் அளிப்பேன் என்று அறிவித்துள்ளீரே" என வேண்டினார். ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தம் மக்களுக்குச் செய்யப்போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாது விட்டுவிட்டார்.

விடைகள் : **உருக்கி, எரிபலிகள், வாக்களித்த, தீங்கிழைக்கும், எகிப்து, அழித்தொழிக்க, தெய்வங்களை, பொற்காதணிகளை, இஸ்ரயேலே, மக்கள்.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம்– 50A

(பொருத்தமான சொற்களின் கீழ் கோடிடுக)

1. அண்மையில் இலங்கையில் நடந்து முடிந்த தென்னாசிய விளையாட்டுப் போட்டிகளில் அதிக பதக்கங்களை வென்ற நாடு
(பாகிஸ்தான், இந்தியா, இலங்கை)

2. கழுகை ஒரு பாத்திரமாகக் கற்பிதம் செய்துள்ள காவியம்
(இராமாயணம், சிலப்பதிகாரம், நளவெண்பா)

3. உலகின் முதலாவது பெண் பிரதமர்
(இந்திராகாந்தி, மார்கிரட்தச்சர், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா)

4. ஸ்வரத் தொகுதிகளாலான இசை என்று அழைக்கப்படுவது
(கர்நாடக இசை, மேற்கத்தைய இசை, ஹிந்துஸ்தானிஇசை)

5. புரட்சியினால் வீழ்த்தப்பட்ட ஜார் மன்னன் ஆண்ட நாடு
(பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா)

6) "சல சல என்று ஓடிய" என்ற வாக்கியத்தில் வரும் சல சல என்பது
(அடுக்குத் தொடர், இரட்டைகிளவி, இடைப்போலி)

பெயர் : ................................................................................

முகவரி : ................................................................................

................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 50A
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 48 விடைகள்

ஞானம், வெள்ளி, தாண், ஆண்டவர், புனிதமாக்குகிறவர், ஓய்வுநாளை, ஆறு நாள்கள், இஸ்ரயேல், விண்ணுலகையும், சீனாய்மலை.

## அறிவை வளர்ப்போம் - 48 விடைகள்

1. இந்தோனேசியா 2. உவில் கென்றிக்சன் 3. பருந்தாகுமா
4. ஜேர்மனி 5. பதினான்கு

(*ஆறாவது வினா வல்லினம் மிகுந்த வாக்கியம் என்று வந்திருக்க வேண்டியது அதற்குப் பதிலாக வேற்றுமை உருபைக் கொண்ட வாக்கியம் என்று பிழையாக வந்ததால் அவ்வினா போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.)

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் விடை அளித்து இசை நாடா பரிசு பெறுவோர்.**

- M. அருணன்
M.O.H. விடுதி,
கல்முனை.
- M. கிருஷ்னிக்கா
இல: 01, புளியடி ஒழுங்கை,
கல்லடித் தெரு,
மட்டக்களப்பு.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்து ஐம்பது ரூபா பரிசு பெறுவோர்.**

- A. றொபேர்ட்
201/12 N.C வீதி,
திருகோணமலை.
- R. மேகலதா
புனித திரேசாள் மடம்,
சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

- P. டிலக்சனா
66/1, மாணிக்கப் பிள்ளையார்
கோயில்வீதி , அமிர்தகழி
மட்டக்களப்பு.
- டிலக்ஷன் ஜெரி
கிறிஸ்ரோ றெக்ஸ்
130/12 றாகல் ஒழுங்கை,
கல்முனை 01-B.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## அக்டோபர் ~ 2006

**கத்தோலிக்க நற்சிந்தனை – நேரம் :– காலை 6.10 மணி.**

நாள்:

01, 02, 03 - அருள் தந்தை ஜே.எஸ்.மொறாயஸ்

04, 05, 06 - திரு. எல். அலெக்சான்டர்

14, 15, 16,17 - அருள் தந்தை பிரைனர் செலர்

18, 19, 20 - அருள் தந்தை இக்னேஸ் யோசப்

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) – நேரம்:– மாலை 6.30 மணி.**

நாள் 10 - விவிலியக் கதை வினாவிடைப் போட்டி

அமைப்பு - பாரதிப்பிரியா

24 - கதையும் கருத்தும்

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) – நேரம்:– மாலை 6.30 மணி.**

நாள் 08 - பிரான்சிஸ்கன் சபை சகோதரர்கள்

22 - உலக மறை அறிவிப்பு தினம்

சிறப்புரை - அருள்தந்தை ஜீவராஜ்

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

*Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org